வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 21.04.2025 திங்கட்கிழமை இதழ் : 112 பக்கங்கள் : 12

# அதிகாரத்தை கைப்பற்றுவதற்கே ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்டது!

## உயிர்த்த ஞாயிறு தினத்தில் ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

- விசாரணை என்ற போர்வையில் தகவல்கள் மறைப்பாம்

கொழும்பு, ஏப்ரல் 21

**ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்காகவே 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தில் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.**

பொலநறுவையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், 2019 ஏப்ரல் முதல் 2024 செப்ரெம்பர் வரையிலான ஐந்தரை ஆண்டுகள் விசாரணை என்ற போர்வையில் தாக்குதலுடன் தொடர்புடையவர்களின் தகவல்களை மறைக்கும் முயற்சிகளே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2019ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த அரசாங்கத்துக்கோ 2019 நவம்பர் உருவாக்கப்பட்ட அரசாங்கத்துக்கோ இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய சூத்திரதாரிகளை சட்டத்தின் முன்கொண்டு வருவதற்கான நோக்கம் இருக்கவில்லை. இந்த அரசாங்கங்களுக்கு உண்மையான சூத்திரதாரிகளை மறைக்க வேண்டிய தேவையே காணப்பட்டது.

தாக்குதல் இடம்பெற்று ஆறு வருடங்கள் கடந்துள்ள நிலையில் - நாம் ஆட்சிக்கு வந்து 6 மாதங்களே ஆகியுள்ள போதிலும் உயிர்த்த ஞாயிறு 11



### ஈஸ்டர் தாக்குதல்: இறந்தவர்கள் விசுவாசத்தின் சாட்சிகளாக அங்கீகாரம்!

கொழும்பு, ஏப்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களை 'விசுவாசத்தின் சாட்சிகள்', என்று அங்கீகாரம் வழங்க வத்திக்கான் முடிவு செய்துள்ளது.

பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் பாப்பரசர் பிரான்சிஸிடம் முன்வைத்த வேண்டுகோளின் பிரகாரம் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த அங்கீகாரம் தொடர்பான பிரகடனம் இன்று திங்கட்கிழமை மாலை 5:30 மணிக்கு நீர்கொழும்பு - கட்டுவாபிட்டி புனித செபஸ்தியார் தேவாலயத்தில் அறிவிக்கப்படும் 11

## ஈஸ்டர் தாக்குதல்களை வைத்து அரசாங்கம் அரசியல் செய்கிறது

சாடுகிறார் நாமல் எம். பி.

கொழும்பு, ஏப். 21

"துரதிர்ஷ்டவசமாக, தற்போதைய அரசாங்கம் ஈஸ்டர் தாக்குதல்கள் என்ற தேசிய துயரத்தை ஓர் அரசியல் கருவியாகப் பயன்படுத்திக் கொள்கிறது" - இவ்வாறு சாடியுள்ளார் நாமல் ராஜபக்ஷ எம்.பி.

நேற்றைய தினம் ஊடகங்களிடம் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், நீதியரசர் ஜனக் டி சில்வா தலைமையிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை, அப்போதைய ஜனாதிபதியின் உத்தரவின்படி, 2021 பெப்ரவரி 23 அன்று முறையாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, 2021 பெப்ரவரி 25 11

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இன்றுடன் 6 ஆண்டுகள் நிறைவு!

கொழும்பு, ஏப். 21

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களின் 6ஆவது ஆண்டு நினைவுதினம் இன்றாகும். இதையொட்டி, நாடு முழுவதுமுள்ள தேவாலயங்களில் விசேட பூசைகள், திருப்பலிகள் மற்றும் நீதி கோரிய பேரணிகள் நடைபெறவுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தினமான கடந்த 2019 ஏப்ரல் 21ஆம் திகதி கொழும்பு, நீர்கொழும்பு, மட்டக்களப்பு என மூன்று நகரங்களில் 3 தேவாலயங்கள், 3 ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள், ஒரு 11



### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்: ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை சி. ஐ. டியிடம்!

கொழும்பு, ஏப். 21

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை நேற்று ஞாயிற்றுக்கிழமை குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் (சி. ஐ. டி) கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையிலுள்ள விடயங்கள் தொடர்பில் விசாரிக்க 11



## நாடு முழுவதும் நேற்று ஈஸ்டர் கொண்டாட்டம்

கொழும்பு, ஏப். 21

கிறிஸ்தவ மக்களால் நேற்றைய தினம் உயிர்த்த ஞாயிறு தினம் கொண்டாடப்பட்டது. இதையொட்டி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு உட்பட நாடு முழுவதுமுள்ள தேவாலயங்களில் விசேட ஆராதனைகள் வழிபாடுகள் நடைபெற்று திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இயேசு பிரான் சிலுவையில் அறையப்பட்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தமையை 11

## அரசாங்கத்தின் நேர்மறை நடவடிக்கைக்கு பாராட்டு!

கத்தோலிக்க ஆயர் பேரவை

கொழும்பு, ஏப். 21

2019 ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதல்கள் குறித்து சுயாதீனமான மற்றும் பாரபட்சமற்ற விசாரணையை உறுதி செய்வதற்கு தற்போதைய அரசாங்கம் சில நேர்மறையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்று இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை நேற்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. 11

## ஊழல் அரசியலில் ஈடுபட்டவர்கள் இப்போது குழப்பமடைந்துள்ளனர்!

நெடுங்கேணியில் பிரதமர் ஹரிணி

- குமார. கோகுலன் -

வவுனியா, ஏப். 21

ஊழல் அரசியலில் ஈடுபட்டிருந்தவர்கள் இப்போது நன்கு குழப்பமடைந்துள்ளனர். அத்துடன், அரசியல் ரீதியாக நிர்க்கதியானவர்களின் இறுதி தஞ்சம் இனவாதம் என்பது இன்றைய தினங்களில் 11

## களவெடுக்க சென்றவர் தாக்கி மூதாட்டி மரணம்!

பருத்தித்துறையில் சம்பவம்

- எஸ்.தில்லைநாதன், பு.கஜிந்தன் -

வடமராட்சி, ஏப். 21

களவெடுக்கச் சென்ற இளைஞர் பொல்லால் தாக்கியதில் மூதாட்டி ஒருவர் உயிரிழந்தார்.

பருத்தித்துறை - தும்பளை பகுதியில் உயிர்த்த ஞாயிறு தினமான நேற்று காலை இந்தச் சம்பவம் 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகள், குடும்ப உறுப்பினர்கள் எங்கே? தாய்மார்கள் பல ஆண்டுகளாக துக்கத்தில்!

## முல்லைத்தீவில் பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஏப்.21

முல்லைத்தீவு உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான தாய்மார்கள் தங்கள் பிள்ளைகள், கணவர்களுக்கு, குடும்ப உறுப்பினர்களுக்கு என்ன நடந்தது என்பதற்கான பதில்களைத் தேடி, பல ஆண்டுகளாக துக்கத்தில் உள்ளனர் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.



முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட நட்டாங்கண்டல் பொதுச் சந்தை வளாகத்துக்கு அருகிலும் மல்லாவி பகுதியில் உள்ள துணுக்காய் பிரதேச சபைக்கு சொந்தமான பொது நூலக வளாகத்திலும் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த மக்கள் சந்திப்புக்களில் பிரதமர் மேலும் கூறியதாவது,

"முன்னைய அரசாங்கங்களில் கிராமிய அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் ஒரு சிறிய அளவு மட்டுமே கிராமத்தை வந்தடைந்தது.

அவை இடையில் உள்ள தனிப்பட்ட நபர்களின் சட்டைப் பைகளுக்குள் சென்றன. அதனால்தான் கிராமங்கள் முறையாக அபிவிருத்தியடையவில்லை.

நான் இங்கு வந்தபோது, உங்களுக்கு அருகிலுள்ள மருத்துவமனையில் மருத்துவர்கள் பற்றாக்குறை இருப்பதையும், மருத்துவமனையில் சத்திர சிகிச்சைக் கூடம் இல்லை என்பதையும், சத்திர சிகிச்சைக் கூடம் உள்ள மருத்துவமனைக்கு சுமார் 50 கிலோ மீற்றர் தூரம் பயணிக்க வேண்டியுள்ளது என்பதையும் அறிந்தேன்.

அவ்வாறே, பிரதேச பாடசாலையில் விஞ்ஞானப் பிரிவில் உயர்தரத்தில் கற்பிக்க ஆசிரியர்கள் இல்லாததால், பிள்ளைகள் 50 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஒரு பாடசாலையில் விஞ்ஞான பாடத்தை கற்க பயணிக்க வேண்டியுள்ளது என்றும் கேள்விப்பட்டேன்.

பொதுப் போக்குவரத்து, பிள்ளைகளுக்கான கல்வி வசதிகள், மின்சாரம் போன்ற சரியான வசதிகள் இல்லாததால் பிரதேச மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை நாங்கள் அறிவோம். இந்தச் சூழ்நிலைகளை மாற்ற விரும்புவதால் தான் நீங்கள் எங்களைத் தெரிவு செய்துள்ளீர்கள்.

அனைத்து பிள்ளைகளும் தங்கள் திறமைகள் மற்றும் ஆற்றல்களின் அடிப்படையில் தங்கள் சொந்த வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்கவும், வளர்ச்சியடைந்து முன்னேறவும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். எங்கள் அரசாங்கம் எப்படியாவது அந்தப் பணியைச் செய்யும் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன்.

முன்னைய அரசியல் முறைமையின் கீழ், கிராமிய அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதி கிராமத்தை வந்தடையும் போது, 75சதவீதம் தனிநபர் களின் சட்டைப் பைகளுக்குச் சென்றது, மீதமுள்ளவையே கிராமத்துக்கு வந்துசேர்ந்தன. அந்த முறைமையின் காரண மாக தான், இந்தப் பகுதிகள் இதுவரை அபிவிருத்தியடையவில்லை.

2025 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு அதிக அளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளதால், மோசடி அல்லது ஊழல் இல்லாமல் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அந்தப் பணத்தை முறையாகப் பயன்படுத் தக்கூடிய ஒரு குழுவை பிரதேச தலைமைத்துவத்துக்குத் தெரிவு செய்ய வேண்டும்.


இந்தப் பகுதிகளில் உட்கட்டமைப்பு மட்டுமல்ல, ஏராளமான மனித உயிர்களும் அழிக்கப்பட்டன. இன்னும் சிலருக்கு என்ன நடந்தது என்பதற்கு பதில் இல்லை.

இந்தப் பகுதி போன்றே, நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஆயிரக்கணக்கான தாய்மார்கள் தங்கள் பிள்ளைகள், கணவர்களுக்கு, குடும்ப உறுப்பினர்களுக்கு என்ன நடந்தது என்பதற்கான பதில்களைத் தேடி, பல ஆண்டுகளாக துக்கத்தில் உள்ளனர்.

அந்த பதில்களைக் கண்டறியவும், இதுபோன்ற விடயங்கள் மீண்டும் நடக்காமல் தடுக்கவும் நாங்கள் தலையிடுவோம் என்பதை உங்களுக்கு உறுதியளிக்கிறோம்.

கலாசார பன்முகத்தன்மையால் சிறப்புற்று விளங்கும் ஒரு நாட்டில் உழைக்கும் மக்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட, இனவாதம் இல்லாத, அனைவருக்கும் நியாயமான மற்றும் சமத்துவமான ஒரே தளம் மற்றும் இயக்கம் தேசிய மக்கள் சக்தியாகும்.

2024 இல் இந்த நாட்டு மக்களால் ஆரம்பிக்கப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பயணம் 2025 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் தேர்தலில் மற்றொரு படி முன்னேறி, எதிர்காலத்துக்காக ஒரு தூய்மையான பிரதேச சபை மற்றும் நகர சபையை கட்டியெழுப்புவதற்கு நாம் ஒன்றிணைவோம்"- என்றார். (எ)



# சந்நிதியான் ஆச்சிரமத்தால் லலீசன் கௌரவிக்கப்பட்டார்

யாழ்ப்பாணம், ஏப். 21

தமிழ்நாடு ஆளுநரின் விருதை பெற்ற சொற்பொழிவாளர் செந்தமிழ்ச்சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் சந்நியான் ஆச்சிரமத்தின் முதல்வர் கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகளாலும் ஆச்சிரம தொண்டர்களாலும் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

இந்த வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை ஆச்சிரம நடைபெற்றது. இதன் போது ஆச்சிரமத்தினர் சார்பில் பாராட்டுரையை சொல்லின் செல்வர் இரா. செல்வ வடிவேல் நிகழ்த்தினார்.

மோகனதாஸ் சுவாமிகள் நினைவுச் சின்னம் கையளித்தார். ஆச்சிரம தொண்டர்களும் அடியவர்களும் லலீசனை பொன்னாடை போர்த்தியும் மாலை அணிவித்தும் கௌரவித்தனர்.

"சொற்பொழிவாளர் லலீசன் 1998ஆம் ஆண்டு பலாலி ஆசிரிய கலாசாலை மாணவனாக சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டு சந்நிதியான் ஆச்சிரமத்தில் முதன்முதலாக பொது வெளியில் தனது சொற்பொழிவை ஆரம்பித்து இன்று இந்த உயர் நிலையை அடைந்துள்ளார்" என்று ஆச்சிரம சுவாமிகள் தனது உரையில் பாராட்டியிருந்தார். (ஐ-02)

# நிதியை வைத்து தமிழரை அடிபணிய செய்ய முயற்சி

## அரசை சாடுகிறது த. தே. ம. முன்னணி!

யாழ்ப்பாணம், ஏப். 21

நிதியை வைத்து தமிழர் தாயகத்தை அடிபணியச் செய்ய - அடக்குமுறை செய்ய அநுர தலைமையிலான தேசிய மக்கள் முனைகிறது என்று யாழ். மாநகர சபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்

முதல்வர் மற்றும் துணை முதல்வர் வேட்பாளர்கள் சாடியுள்ளனர். யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர்கள் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

தனது கட்சியிடம் அதிகாரம் கிடைக்கும்பட்சத்தில் உள்ளூர் அதிகர சபைகளுக்கு நிதி ஒதுக்கப்படும் என்ற தொனிப்பொருளில் வடக்கின் தேர்தல் பிரசார மேடைகளில் கருத்து வெளியிட்டு வருகிறார்.

இது ஒரு மிகப்பெரிய ஊழல் மோசடியாகும். இது குறித்து தேர்தல் ஆணைக் குழுவுக்கு இரண்டாவது கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் கருத்து ஒரு மக்கள் கூட்டத்தின் ஜனநயகத்தை கேள்விக் குறியாக்குகிறது. அதுமட்டுமல்லாது இவர்கள் எத்தகைய பொய்யர்கள் என்பதை காட்டுகின்றது. இதை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

நிதியை வைத்து தமிழர் தாயகத்தை அடிபணியச் செய் யும் அடக்குமுறை இந்த அரசு செய்ய முயல கின்றது. இவர்களின் மிரட்டல் அதிகார இலஞ்சத்தை எவரும் ஏற்காது தேசிய மக்கள் சக் தியை தமிழர் தாயக பகுதிகளில் இருந்து மக்கள் தூக்கி எறிவது அவசியமாகும் - என்று கூறினர். (ஐ-05)

# ஜ. த. தே. கூட்டணியின் வேட்பாளர் அறிமுகம்!



வவுனியா, ஏப். 21

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு நேற்று மாலை வவுனியா தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் சிவசிறீ திவாகரக் குருக்கள் ஆசியுரையை வழங்கினார். அதனைத் தொடர்ந்து வவுனியா மாவட்டத்தில் உள்ள 4 உள்ளூராட்சி சபைகளிலும் போட்டியிடவுள்ள வேட்பாளர்களின் அறிமுக நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் செயலாளர் குரு, கூட்டணியின் பங்காளிக் கட்சிகளின் பிரதிநிதிகள், ஆதரவாளர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ-10)





தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் வவுனியா மாநகர சபையில் போட்டியிடும் வேட்பாளர்களின் பிரசாரக்கூட்டம் வவுனியா பொங்குதமிழ் தூபியில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போது, அன்னை பூபதியின் உருவப்படத்துக்கு அஞ்சலி செலுத்திய பின்னர் பிரசாரம் நடைபெற்றது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
21.04.2025 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 08

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## பிமல் ரத்நாயக்க அவர்களே!

"ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் உரையை விமர்சிப்பதற்கு தமிழ் மக்களை ஏமாற்றி வரும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்கு அருகதையில்லை", என்று அமைச்சரும் ஜே. வி. பியின் செல்வாக்குமிக்க உயர் குழுவில் ஒருவருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்திருக்கிறார். இலங்கை தமிழ் அரசு கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் அண்மைக்காலமாக ஜனாதிபதி அநுர குமாரவை விமர்சித்து வருகின்றனர். இருவரும் விமர்சிக்கும் போக்கு வித்தியாசமானது. ஆனால், அவர்களின் தேர்தல் பிரசாரங்களில் அநுர குமார என்னும் நாமம் அவ்வப்போது வந்து போகின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்தில், ஆளும் கட்சியின் உள்ளூராட்சி சபைகளுக்கு நிதி எளிதாக ஒதுக்கப்படும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க கூறினாரெனவும் இது ஒரு தேர்தல் கையூட்டு நடவடிக்கை என்றும் சுமந்திரன் குறிப்பிட்டிருந்தார். குறித்த கருத்து, ஊடகங்களில் செய்தியான நிலையிலேயே, பிமல் ரத்நாயக்க இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார். சுமந்திரன் முன்னர் அநுர குமாரவின் நேர்மையை புகழ்ந்தவர் என்பது வேறு விடயம்.

ரத்நாயக்க கூறுவது போன்றே, தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களை ஏமாற்றி வருகிறார்கள். எனவே, அவர்களுக்கு ஜே. வி. பியின் தலைவர்களை விமர்சிப்பதற்கு அருகதையில்லை என்பது உண்மையாகவே இருக்கட்டும். ஆனால், முதலில் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொண்ட ஜே. வி. பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இதுவரையில் தமிழ் மக்களுக்காக செய்தது ஒன்றுமில்லையே. முதலில் அதனை அநுர குமார திஸநாயக்க தலைமையிலான ஜே. வி. பி. நிரூபிக்க வேண்டும் அல்லவா? நீங்கள் தமிழ் மக்களை ஏமாற்றாதவர்கள் என்பதை செயலில் காண்பியுங்கள் அமைச்சரே!

ஜே. வி. பி. தொடர்பில் தமிழ் தேசியவாத கட்சிகள் முன்வைக்கும் பிரதான குற்றச்சாட்டு நீங்கள் இறுதி யுத்தத்தின்போது, மகிந்த ராஜபக்ஷவின் கொடூர யுத்தத்தை ஆதரித்தவர்கள். அதனை சோர்வின்றி முன்னெடுப்பதற்காக இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள். அந்த வகையில் போர் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடு உங்களுக்கும் உண்டு என்பதே அவர்களின் குற்றச்சாட்டாக இருக்கிறது.

அது தவறான குற்றச்சாட்டு என்று நீங்கள் கருதினால், இறுதி யுத்தத்தின்போதான அத்துமீறல்கள் தொடர்பில் உரிய விசாரணையை மேற்கொண்டு அதனை தமிழ் மக்களுக்கு வெளிப்படுத்துங்கள். ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் விடயத்தில் இந்தளவு தீவிரம் காண்பிக்கும் நீங்கள் ஏன் தமிழ் மக்கள் விடயத்தில் விரைவான நேர்மையான விசாரணைக்கான ஈடுபாட்டை காண்பிக்கவில்லை? நீங்கள் ஏனைய ஆட்சியாளர்கள் போன்று மக்களை ஏமாற்றுபவர்கள் அல்ல என்றால் அதனை செயலில் காண்பியுங்கள். நீங்கள் உங்களுடைய செயல்பாட்டில் உண்மையாகவும் - நேர்மையாகவும் - உறுதியாகவும் இருந்தால் தமிழ் மக்களே தமிழ் அரசியல்வாதிகளை நிராகரித்துவிட்டு உங்களோடுதானே கைகோப்பார்கள். முதலில் உங்களை செயலில் நிரூபித்து காட்டுங்கள் - அதன் பின்னர் நீங்கள் தாராளமாக தமிழ் கட்சிகளின் ஏமாற்று அரசியல் பற்றி பேச முடியும்.

# தமிழ்த் தேசிய பேரவை வேட்பாளர்கள் அறிமுக கூட்டம் வல்வெட்டித்துறையில்



யாழ்ப்பாணம், ஏப். 21

வல்வெட்டித்துறை நகர சபைக்கான தேர்தலில் போட்டியிடுகின்ற தமிழ்த் தேசிய பேரவையின் வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைக்கும் கூட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை வல்வெட்டித்துறை நகராட்சி மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கட்சியின் வல்வை இணைப்பாளர் வி. கவிச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ. கஜேந்திரன், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என். சிறீகாந்தா, பொதுச் செயலாளரும் வல்வை நகர சபையின் முதன்மை வேட்பாளருமான எம். கே. சிவாஜிலிங்கம், சமூக - அரசியல் செயல்பாட்டாளர் க. அருந்தவபாலன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க. சுகாஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

(எ-05)

# நாட்டின் சுதேச மருத்துவம் அழியும் அபாய நிலையில்!

## வைத்தியர் உமாதேவி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 21

இலங்கைக்குரிய சுதேச மருத்துவம் இல்லாது அற்றுப்போகும் நிலை உருவாகியுள்ளது. இந்த நிலையை மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் - இவ்வாறு அனைத்து இலங்கை வருங்கால சுதேச மருத்துவ அதிகாரிகள் சேவை சங்கத்தின் வைத்தியர் பார்த்தீபன் உமாதேவி தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

நாடளாவிய ரீதியில் ஆயுள்வேத, சித்த, யுனானி, என்ற ரீதியில் இலங்கையில் சுதேச மருத்துவம் இருக்கிறது. இந்த கற்கை நெறியை நிறைவு செய்த தமிழ், சிங்களம், முஸ்லிம் என 1,700 பட்டதாரிகள் வேலைக்காக காத்திருக்கின்றனர்.

இதைவிட 600 பேர் இறுதிப் பயிற்சி நிலையில் இருக்கின்றனர். இதேநேரம் மருத்துவ பயிற்சி நெறியை முடித்தும் தம்மை பயன்படுத்தாத நிலையில் அல்லது போக்கில் இலங்கையின் சுதேச மருத்துவம் இருப்பது கவலையானது.

மக்களுக்காக சேவை செய்ய நாம் தயாராக இருக்கிறோம். ஆனால் அரசு மௌனமாக இருக்கிறது. இதைவிட ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக ஏறத்தாள 1600இற்கும் அதிகமானோர் இருக்கும் போது வெறும் 350 இற்கும் குறைவானவர்களையே நியமனத்தில் உள்வாங்க அரசு முனைகிறது. ஆனால் கிராமங்கள் தோறும் சமூக நல வைத்திய அதிகாரிகளாக கூட எம்மை பயன்படுத்த முடியும்.

இந்த போக்கால் இலங்கைக்குரிய சுதேச மருத்துவம் இல்லாது அற்றுப்போகும் நிலையே உருவாகியுள்ளது - என்றார்.

(ஐ)

# ரயிலிலிருந்து தவறி விழுந்தவர் மரணம்

மன்னார், ஏப். 21

ரயிலில் இருந்து தவறி விழுந்து குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.


மன்னார் - உயிலங்குளம் - சிறுநாவற்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் 68 வயது நபரே உயிரிழந்தார்.

தனது நெருங்கிய உறவினர்களைவழியனுப்ப வந்த அவர் ரயில் புறப்படும்போது இறங்க முயன்றுள்ளார். இதன்போது, தடுமாறி விழுந்த அவர் படுகாயமடைந்த நிலையில் மன்னார் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் குறித்து உயிலங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் - 21 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம் - சித்திரை 08
நல்ல நேரம்:6.00 - 7.30
ராகு காலம்:7.30 - 9.00
திதி : அட்டமி




**மேடம்**

கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள்.

**இடபம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையும் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். சந்தேகப்புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும்.

**மிதுனம்**

பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. வாகனத்தை சீர் செய்வீர்கள். நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள்.

**கடகம்**

சமயோசிதமாகவும் சாதுர்யமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர், நண்பர்கள் உங்களிடம் முக்கிய விஷயங்களை பகிர்ந்து கொள்வார்கள். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள்.

**சிம்மம்**

குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி**

திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். வெளிவட்டார தொடர்புகள் அதிகரிக்கும். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள்.

**துலாம்**

குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். சொத்து வாங்குவது, விற்பது லாபகரமாக அமையும்.

**விருச்சிகம்**

குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். மனசாட்சி படி செயல்படும் நாள்.

**தனுசு**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக் காமல் நீங்களே முடிப்பது நல்லது. அவசர முடிவு களை தவிர்க்கப் பாருங்கள். தொந்தரவுகள் அதிகரிக்கும்.

**மகரம்**

விவாதங்களை தவிர்ப்பது நல்லது. சகோதர வகையில் மனத்தாங்கல் வரும். எளிதாக முடிய வேண்டிய விஷயங்களை கூட பலமுறை போராடி முடிப்பீர்கள்.

**கும்பம்**

எதிர்பார்ப்புகள் நிறைவேறும். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். பிள்ளைகளின் பொறுப்புணர்வுகளை பாராட்டுவீர்கள். பிரபலங்கள் உதவுவார்கள். பொறுப்புகளை ஏற்பீர்கள்.

**மீனம்**

சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். சொன்ன சொல்லை காப்பாற்ற துடிப்புடன் செயல்படுவீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். சாதிக்கும் நாள்.

# வல்லரசுகளின் நிகழ்ச்சி நிரலால் பாதிக்கப்படுவதை ஏற்கமுடியாது

## கஜேந்திரகுமார் எம். பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.21

எங்களுடைய மக்களின் உரிமைகள், இருப்பு சார்ந்த விடயங்கள் வல்லரசுகளின் நிகழ்ச்சி நிரலால் பாதிக்கப்படுவதாகயிருந்தால், அதனை எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளக்கூடாது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

சமூக அரசியல் செயல்பாட்டாளர் நியூட்டன் மரியநாயகம் எழுதிய காட்டிக்கொடுக்கப்பட்ட கடலும் கைவிடப்பட்ட மக்களும் நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கைத் தீவில் பூகோள அரசியல் ஆதிக்கம் அதன் அழுத்தங்கள் நிச்சயமாக இருக்கும். இதனை மறுக்க முடியாது.

அதனை விட தமிழ்த் தேசத்திலே வரக்கூடிய அழுத்தங்கள் என்பது, இலங்கைத் தீவைவிட அதிகமாகயிருக்கும்.

அப்படிப்பட்ட பூகோள அரசியல் போட்டித்தன்மை மிகவும் உச்சமடைந்திருக்கின்ற நிலையிலே, அதனுடைய உள் விளைவாக நாங்கள் இனப்படுகொலைக்கு முகம்கொடுத்த அதனை அனுபவித்த ஒரு நிலையிலே, அந்த இன அழிப்புக்கு பிற்பாடு அந்த பூகோள அரசியலை கையாளுவது எப்படி என்பது பற்றி நாங்கள் ஆழமாக சிந்தித்து வருகின்றோம்.

அதனுடைய ஒரு முக்கியமான விடயமாகத்தான் தமிழீழ நிலப்பரப்பிலே இருக்கக்கூடிய கடற்தொழிலாளர்கள் முகங்கொடுக்கின்ற பிரச்னைகள் உள்ளன.

அந்த வகையிலே இந்திய மீனவர்கள், தமிழ்நாட்டிலே இருந்து வந்து வடமாகாண கடற்தொழிலாளர்களுடைய தொழிலை அழிப்பது, எங்கள் கண்ணுக்கு முன்னாலே தெரிகின்ற விடயம்.

அதனை எதிர்ப்பது என்பது மிகவும் கடினமான விடயம் அல்ல.

ஆனால், இந்த பாதிப்பு ஒருபக்கத்தில் உச்சமடைந்து கொண்டிருக்க இன்னொரு பக்கத்தில் வந்து இந்தியாவுக்கு போட்டியாக இருக்கக்கூடிய சீன வல்லரசு எங்கள் கடல் எல்லைக்குள் தனது ஆதிக்கத்தை செலுத்தக்கூடிய விதத்திலே தங்களது கடலட்டை பண்ணைகள் முதல் வேறு பல திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்ற போது, சீன வல்லரசின் அந்த விடயங்கள் கண்ணுக்கு சுலபமாக தென்படுகின்ற விடயங்களாகயிருக்கவில்லை.

எங்களை பொறுத்தவரையில் இந்த பூகோள ஆதிக்க போட்டியில், நாங்கள் வெளிப்படையாக கூறுகின்றோம், இலங்கைத் தீவை பொறுத்தவரை விசேடமாக தமிழ்த் தேசத்தை பொறுத்தவரையிலே நாங்கள் இந்தியாவுக்கு ஒரு முன்னுரிமை வழங்கியே ஆகவேண்டும்.

ஏனென்றால் அவர்களுக்கு இலங்கைத் தீவில் பாதுகாப்பு நலன்சார்ந்த அக்கறை உள்ளது.


அதேநேரம், சீனா போன்ற ஒரு வல்லரசு இலங்கையிலோ அல்லது தமிழ்த் தேசத்திலோ ஏதோ ஒரு நட்புறவை பேணுவதற்கு விரும்பி, உதவி செய்வதற்கு வருகின்ற நேரத்தில் அவர்களை எதிர்க்கக்கூடாது என்பதிலும் நாங்கள் தெளிவாக இருக்கின்றோம்.

எங்களைப் பொறுத்தவரை எவரும் எங்களின் எதிரியாக இருக்கக்கூடாது, எவரையும் எதிரியாக கணிக்கவும் கூடாது.

ஆனால், எங்களுடைய மக்களின் உரிமைகள், இருப்பு சார்ந்த விடயங்கள் அந்த வல்லரசுகளின் நிகழ்ச்சி நிரலால் பாதிக்கப்படுவதாகயிருந்தால்,

அதனை எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளக் கூடாது"- என்றார். (எ)

# கிளிநொச்சியில் புத்தாண்டு கொண்டாட்டம்





கிளிநொச்சி, ஏப். 21

தமிழ், சிங்கள புத்தாண்டை சிறப்பிக்கும் முகமாக இலங்கை படைப்பிரிவின் 55 ஆவது காலாற் படையணியின் ஏற்பாட்டில் புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வுகள் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன் ஆரம்ப நிகழ்வாக காலை 06. 00 மணியளவில் ஆண், பெண் இருபாலாருக்குமான துவிச்சக்கர வண்டி ஓட்டம் மற்றும் மரதன் ஓட்டப் போட்டிகள் நடைபெற்றன.

இதனை கிளிநொச்சி மாவட்ட 55 ஆவது காலாற் படைப் பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் சம்பத் பெர்னாண்டோ ஆரம்பித்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து மைதான விளையாட்டுக்களான வழுக்கு மரம் ஏறுதல், தலையணைச் சண்டை, கிடுகு பின்னுதல், யானைக்கு கண் வைத்தல் முதலான பல பாரம்பரிய விளையாட்டுக்கள் இடம் பெற்றன.

இந்த நிகழ்வுகளில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர். (எ)

# சந்நிதியான் ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வு



யாழ்ப்பாணம், ஏப். 21

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வும் அருளுரையும் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

ஆன்மீக அருளுரையாக மகாபாரதம் என்ற தொடர் சொற்பொழிவு இடம்பெற்றது. ஆசிரியர் இரா. செல்வவடிவேல் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

உதவித் திட்டமாக, கெருடாவில் தெற்கு, தொண்டைமானாற்றை சேர்ந்த இளந் துளிர் அமைப்பின் கோரிக்கைக்கு அமைவாக, சித்திரைப் புத்தாண்டு நிகழ்வுக்காக 30 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கப்பட்டது. (எ-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

# பிரதான சூத்திரதாரி ஐ. எஸ். அமைப்பே!

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி



கொழும்பு, ஏப். 21

**உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி ஐ.எஸ் இயக்கமே என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.**

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த நேர்காணலி லேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், ஜே. ஆர் காலம் தொட்டு மகிந்த காலம் வரை இந்நாட்டில் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். உயிர்த்த ஞாயிறு தாக்குத லும் அதுபோன்ற ஒரு சம்ப வமே.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக எனக்குத் தெரிந்த விடயங்களை நான் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் தெரிவித்துள்ளேன். அவற்றை வெளியிடுவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குத லின் பிரதான சூத்திரதாரி ஐ. எஸ். இயக்கமேயாகும். அமெ ரிக்காவின் சி. ஐ. ஏ. உளவுப் பிரிவும் அதனை உறுதி செய துள்ளது.

கருணா, பிள்ளையான் போன்றோர் கடந்த காலங்க ளில் சிங்கள பௌத்தர்களை, பௌத்த பிக்குகளைப் படு கொலை செய்தவர்கள். அவர்க ளுக்கு எனது ஆட்சிக்காலத்தில் எந்தவோர் அமைச்சுப் பதவியும் வழங்கவில்லை - என்றார். (ஐ)

# உயர்தர பெறுபேறுகள் இம்மாதம் வெளியாகும்

கொழும்பு, ஏப். 21

க. பொ. த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் இந்த மாத இறுதிக்குள் வெளியிடப் படும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

முன்னதாக நேற்றைய தினம் உயர்தர பரீட்சை பெறுபேறு கள் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், பல சிக் கல்கள் காரணமாக பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவ தில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

சூதாட்டத்தில் தகராறு:

# மருமகனை அடித்துக் கொன்ற தாய் மாமனும் அத்தையும் கைது!

சிலாபம், ஏப். 21

சூதாட்டத்தில் ஏற்பட்ட கைகலப்பில் இளைஞர் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டார். இந்த சம்பவம் தொடர்பில் இளைஞரின் தாய் மாமனும் அவரின் மனைவியுமாக இருவர் கைது செய்யப்பட்டுள் ளனர்.

புத்தளம் - ஆனமடுவ பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.உயிரிழந் தவர் 25 வயதுடைய சஜீத் திவங்க என்பவராவார்.

இவரின் தாய் மாமனும் அவ ரின் மனைவியுமாக இருவர் இந்தக் கொலை தொடர்பில் கைது செய்யப் பட்டுள்ளனர். (ஐ)

# நீண்ட தூர பேருந்து சேவைகள் 200 முறைப்பாடுகள் பதிவாகின

கொழும்பு, ஏப். 21

புத்தாண்டு காலத்தில் சொந்த ஊர்களுக்கு சென்று திரும்பும் பயணிகளிடம் நீண்ட தூர சேவை பேருந்துகள், ஏனைய போக்குவரத்து சேவைகளால் இழைக்கப்பட்ட அநீதிகள் குறித்து சுமார் 200 முறைப்பாடு கள் தேசிய போக்குவரத்து ஆணையத்துக்கு கிடைத்துள் ளன என்று அதன் பணிப்பாளர் ஜெனரல் நவோமி ஜெயவர்த் தன தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் நடத்திய செய் தியாளர் சந்திப்பிலேயே மேற் கண்டவாறு கூறினார்.மேலும், தேசிய போக்குவரத்து ஆணை யத்தின் தொலைபேசி இலக்க மான 1955இற்கு கிடைக்க பெற்ற இந்த முறைப்பாடுகள் குறித்து ஏற்கெனவே விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட கட்ட ணத்தைவிட அதிகமாக வசூ லிப்பது குறித்தே அதிக முறைப் பாடுகள் (63) கிடைத்தன.இது தவிர, பயணிகளுக்கு ரிக்கெற் வழங்காதது தொடர்பாக 38 முறைப்பாடுகளும், பயணிகளி டம் கண்ணியமாகப் பேசா தமை தொடர்பில் 28 முறைப் பாடுகளும் கிடைத்துள்ளன.

இந்த ஆண்டில் நீண்ட தூர சேவை பேருந்துகள் செய்த குற்றங்கள் குறித்து ஆணையத் திடம் முறைப்பாடுகள் தெரி விப்பதற்கு பயணிகள் தயங்க வேண்டாம் என்றும் அவர் இதன்போது கேட்டுக்கொண் டார். (ஐ)

# விசேட பேருந்து சேவைகளால் 130 கோடி ரூபாய் வருமானம்!

கொழும்பு, ஏப். 21

சித்திரை புத்தாண்டை முன் னிட்டு நடத்தப்பட்ட விசேட பேருந்து சேவைகள் மூலமாக தேசிய போக்குவரத்து சபைக்கு 130 கோடி ரூபாய் வருமானம் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப் பட்டது.

தற்போது 24 மணிநேரமும் பேருந்து சேவைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாக தேசிய போக்குவரத்து சபை யின் முகாமையாளர் எச். ஜயதி லக தெரிவித்துள்ளார்.

கண்டி தலதா மாளிகையின் "சிறி தலதா வழிபாட்டு" நிகழ் வுக்காக செல்லும் மக்களின் நலன் கருதி விசேட பேருந்து கள் சேவையில் ஈடுபடுத்தப்பட் டுள்ளன. கண்டி - கொழும்பு வீதியில் மாத்திரம் இலங்கை போக்குவரத்து சபையின் சுமார் 150 பேருந்துகள் சேவையில் ஈடுபடுகின்றன.

மேலும், கடந்த 10 ஆம் திகதி முதல் நேற்றுமுன்தினம் வரை தேசிய போக்குவரத்து சபை சுமார் 130 கோடி ரூபாயை ஈட்டியுள்ளது. இந்த வருமானம் எதிர்வரும் நாட்களில் மேலும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது - என்றும் அவர் கூறினார். (ஐ)

# உகண்டாவில் பதுக்கியதாக கூறப்படும் பணம் வரும்வரை நாம் ஓயமாட்டோம்!

## நாமல் ராஜபக்ஷ சொல்கிறார்



கொழும்பு, ஏப். 21

உகண்டாவுக்கு விமானங் களில் கொண்டு செல்லப்பட் டன என்று கூறப்படும் ராஜபக்ஷக்களின் பணத்தை நாட்டுக்கு கொண்டுவருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாமல் ராஜபக்ஷ கூறியுள்ளார். "அப்படி, முடியாவிட்டால் தான் கூறியது பொய் என்று ஏற்று நாட்டு மக்களிடம் அரசாங்கம் மன்னிப்புக் கோர வேண்டும். அதுவரையில் நான் ஓயப்போவதில்லை", என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகை யிலேயே நாமல் ராஜபக்ஷ இந்த விடயத்தை குறிப்பிட் டார். "அமெரிக்காவின் வரிக்கொள்கையை எதிர் கொள்வதற்குரிய திட்டங்கள் அரசாங்கத்திடம் இல்லை. மாறாக ராஜபக்ஷக்களை விமர்சித்துக்கொண்டு முன் னோக்கி செல்வதற்கே முற்படு கின்றனர். தேர்தல் காலங்களில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு அரசாங் கத்துக்கு நாம் அழுத்தங்களை பிரயோகிப்போம். கைதுக்கு அஞ்சி நாம் அமைதி காக்கப் போவதில்லை.

பாராளுமன்றத்தில் தற் போது சட்டம் இயற்றப் பட்டுள்ளது.

அந்தச் சட்டத்தை பயன் படுத்தி, ராஜபக் ஷக்கள் உகண் டாவில் பதுக்கி வைத்துள்ளனர் எனக் கூறப்படும் பணத்தை இலங்கைக்கு கொண்டு வர வேண்டும். அதற்கு நாம் முழு ஒத்துழைப்பு வழங்குவோம். அதுவரை ஓயமாட்டோம்." - என்றார். (ஐ)

# போதைப்பொருளுடன் பிரேஸில் நாட்டவர் கைது!

கொழும்பு, ஏப். 21

24 கோடி ரூபாய் பெறும தியான போதைப்பொருளுடன் பிரேஸில் நாட்டவர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து அவரை சுங்க திணைக்கள அதிகாரிகள் கைது செய்தனர். அவரிடம் இருந்து 4 கிலோ 855 கிராம் எடை கொக்கைன் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

சந்தேக நபர் அவற்றை அட்டைப் பெட்டியில் ஒட்டி, அதன் மேல் கறுப்பு காகிதத்தை ஒட்டி, தலா 2 அட்டைகள் என 7 சிறிய பைகளில் அடைத்து, பின்னர் ஒரு சூட்கேஸில் மறைத்து வைத்திருந்தார் என்று அதிகா ரிகள் கூறினர்.

கைது செய்யப்பட்டவர் விசாரணைக்காக கட்டுநாயக்கா விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஐ)

# இலங்கைக்கே உரித்தான நுளம்பு இனம் கண்டறிவு!

கொழும்பு, ஏப். 21



இலங்கைக்கே உரித்தான புதிய நுளம்பு இனமொன்று அடையாளம் காணப்பட்டுள் ளதாக மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பூச்சியியல் நிபுணர் கயான் குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய நுளம்பு இனம் கம்பஹா மாவட்டம் மீரிகம பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நுளம்பு இனமானது, கியூலெக்ஸ் லெபொசெரோ மியா சின்ரெலஸ் (Culex (Lephoceraomyia) cin ctellus) என பெயரிடப்பட்டுள் ளது.இந்த நுளம்பு இனம் ஒரு முக்கிய வைரஸ் கடத்தியாக அடையாளம் காணப்பட்டுள் ளது என்றும் பூச்சியியல் நிபுணர் கயான் குமாரசிங்க தெரிவித்துள்ளார். (ஐ)

# தலதா மாளிகை கண்காட்சிக்காக மேலும் 2 விசேட ரயில் சேவைகள்!

கொழும்பு, ஏப். 21

சிறி தலதா வழிபாட்டில் பங்கேற்கும் பக்தர்களின் எண் ணிக்கை அதிகரிப்பால் மேலும் இரு ரயில் சேவைகள் நடத் தப்படவுள்ளன.

கொழும்பு கோட்டையி லிருந்து கண்டி வரை இந்த இரு ரயில் சேவைகளும் நடத்தப் படும் என்று புகையிரதத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி, கொழும்பு கோட்டையில் இருந்து இரவு 7:55 மணிக்கு புறப்படும் ரயில் நள்ளிரவில் கண்டியை அடை யும். இதேபோன்று, இரவு 8:30 மணிக்கு கண்டியில் இருந்து புறப்பட்டும் ரயில் நள்ளிரவில் கொழும்பு கோட்டையை வந்த டையும் என்றும் தெரிவிக்கப் பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றவாளிகள் விரைவில் தண்டிக்கப்படுவார்கள்!

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 21

**முழுநாடும் எதிர்பார்க்கும் விசாரணைகள் மிகவும் சூட்சுமமாக நடத்தப்பட்டு வருகின்றன. மௌனமாக இருந்தவர்கள் இன்று வாய்திறந்து வாக்குமூலம் வழங்கி வருகின்றனர். எனினும், குற்றமிழைத்த சகலருக்கும் தண்டனை வழங்கப்படும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.**

பதுளையில் நேற்று முன்தினம் நடந்த மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்வரும் நவம்பரில் எமது அரசாங்கத்தின் இரண்டாவது வரவு - செலவு திட்டத்தை சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளோம். அதில், அனைத்து பிரச்சனைகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்ய எதிர்பார்த்துள்ளோம்.

தற்போது நிதி இருக்கின்ற போதிலும், அதனை முறையாகப் பயன்படுத்தி பணிபுரிவதற்கு ஆளணி பற்றாக்குறை நிலவுகிறது. அமெரிக்காவின் வரிவிதிப்பு தொடர்பில் பிரச்னை ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கு பயணமாகியுள்ள இலங்கை நிபுணர்கள் குழு எதிர்வரும் 23ஆம் திகதி சர்வதேச நாணய நிதியத்துடனும் அமெரிக்க அதிகாரிகளுடனும் இது குறித்துக் கலந்துரையாடவுள்ளது. இதன் போது, நாட்டுக்கு சாதகமான வகையில் தீர்மானமொன்றை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

இதேநேரம், சில சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் மிகவும் சூட்சுமமாக இடம்பெறுவதால் அது குறித்து மக்களால் தற்போது அறிந்துகொள்ள முடியாது. எனினும், விசாரணைகள் சிறந்த முறையில் இடம்பெறுகின்றன என்ற உறுதியை வழங்க முடியும். மௌனமாக இருந்தவர்கள் இன்று வாய்திறந்து வாக்கு மூலம் வழங்கி வருகின்றனர். முக்கியமான பல சம்பவங்கள் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகளால் விசாரணைகளை நிறைவு செய்வதற்கு தாமதம் ஏற்படலாம்.

எனினும், குற்றமிழைத்த சகலருக்கும் உரிய வகையில் தண்டனை பெற்றுக்கொடுக்கப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிலைநாட்ட அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது - என்றார். (ஐ)

# பாதாள உலகக் குழுவை சேர்ந்த ஒன்பது பேர் கைது!

## துப்பாக்கிகளும் பறிமுதல்

கொழும்பு, ஏப். 21

பாதாள உலக கும்பலை சேர்ந்த "கெஹெல்பத்தர பத்மே" என்று அழைக்கப்படும் மன்தினு பத்மசிறி பெரேரா ஹேவத் என்பவரின் 9சகாக்கள் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலின் பேரில் கம்பஹா - தம்மிட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களிடமிருந்து 2 ரி -56 ரக துப்பாக்கிகள், 2 மகசின்கள், 105 தோட்டாக்கள் 15 கைபேசிகள் என்பனவும் கைப்பற்றப்பட்டன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஏற்றுமதி பயிர்களின் உற்பத்தியில் வீழ்ச்சி!

## இலங்கை மத்திய வங்கி

கொழும்பு, ஏப். 21

நாட்டின் பிரதான ஏற்றுமதி பயிர்களான தேயிலை, தென்னை மற்றும் இறப்பர் ஆகியவற்றின் உற்பத்தி இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் வீழ்ச்சியடைந் துள்ளன என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

வறட்சியான காலநிலையால் கடந்த வருடம் பெப்ரவரி மாதத்தில் தேயிலை உற்பத்தியானது ஒரு கோடியே 56 இலட்சம் கிலோகிராமாக இருந்தது.

இதுவே, இந்த ஆண்டு பெப்ரவரியில் 53 இலட்சம் கிலோ கிராமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இதேநேரம் இந்த வருடம் பெப்ரவரி மாதத்தில் 17 கோடியே 81 இலட்சம் தேங்காய்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

இது கடந்த வருடத்து டன் ஒப்பிடுகையில் கணிசமானளவு வீழ்ச்சியாகும் என்றும் மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# பாராளுமன்ற செலவினங்கள்; கணக்காய்வு நடத்த தீர்மானம்

கொழும்பு, ஏப். 21

வெளிப்படைத்தன்மை இல்லாமையால் கடந்த 10 ஆண்டுகளில் இரண்டு அரசாங்கங்களால் பாராளுமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் தொடர்பில் கணக்காய்வு நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக அவசர கணக்காய்வு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன ஏற்கனவே கணக்காய்வாளர் நாயகத்துக்கு அறிவித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 8, 9 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தில் செலவின பற்றாக்குறை தொடர்பாக எழுந்த பிரச்னைகளில் சபாநாயகர் திருப்தி அடையாமையாலும், கடந்த 10 வருடங்களில் பல தனியார் நிறுவனங்கள் பாராளுமன்றத்தில் கணக்காய்வை நடத்தி வந்திருந்ததாலும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் சபாநாயகர் பணிமனை தெரிவித்துள்ளது.

இதற்கிணங்க, பாராளுமன்றத்தில் தேவையற்ற செலவுகளை குறைப்பதற்கான நடவடிக்கை தற்போது எடுக்கப்பட்டு வருவதாகவும் சபாநாயகர் பணிமனை தெரிவித்துள்ளது.

இதனிடையே, தற்போது வெற்றிடமாகியுள்ள கணக்காய்வாளர் நாயகம் பதவிக்குப் பொருத்தமான ஒருவரை நியமிப்பதற்காக அரசமைப்பு சபை நாளை செவ்வாய்க்கிழமை கூடவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தேயிலை ஏற்றுமதி ஆபத்தில்!

கொழும்பு, ஏப். 21

அமெரிக்கா அறிவித்துள்ள வரிக் கொள்கையால் தங்களது தொழில்துறை பாதிப்படையும் நிலைமை காணப்படுவதாக தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் 90 நாட்கள் சலுகைக் காலத்துக்குள் இந்த பிரச்னை தீர்க்கப்பட வேண்டும்.

அத்துடன், தரவுக ளின் அடிப்படையில் கடந்த ஆண்டு அமெரிக்கா இறக்குமதி செய்த மொத்த தேயிலையில் சுமார் 20 சதவீத பங்கை இலங்கை தக்கவைத்துள்ளது. இந்த சந்தையை இழந்தால் குறு கிய காலத்தில் அதற்கு நிகரான மற்றுமொரு சந்தையை அடைவது கடினம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# உர மானியத்துக்கு பதிலாக பயிர் செய்கை மானியம்!

## விவசாய பிரதி அமைச்சர் தகவல்

கொழும்பு, ஏப். 21

எதிர்காலத்தில் உர மானியத்தை நிறுத்திவிட்டு பயிர் செய்கை மானியத்தை வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது என்று விவசாய பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன், சிறுபோக காலத்தில் வயல்களில் பயிரிடப்படும் மேலதிக பயிர்களுக்கு 15 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படவுள்ளது என்று ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இந்த நிலையில், அரசாங்க உர மானியங்கள் இல்லாததால், பல பகுதிகளில் விவசாயிகள் தற்போது கடுமையான சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று கூறப்படுகிறது. இதனால் பல ஏக்கர் நெல் வயல்களின் பயிர் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் விவசாயிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ஐ)

# டெங்கு, சிக்குன்குனியா பரவும் அபாயநிலைமை!

## சுகாதார பிரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 21

தற்போது பெய்து வரும் மழையால் டெங்கு, சிக்குன்குனியா பரவும் அபாயம் அதிகம் இருப்பதாக சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து கருத்து தெரிவித்த இலங்கை பொது சுகாதார பரிசோதகர் சங்கத்தின் செயலாளர் சமில் முத்துகுட கருத்து வெளியிடுகையில்,

டெங்குவை பரப்பும் நுளம்புகள் மூலமாகவும் சிக்குன்குனியா பரவுகிறது. நீண்ட வார இறுதி விடுமுறை, பாடசாலை விடுமுறை காரணமாக, பலர் சுற்றுலா சென்றுள்ளனர்.

இதனால், தங்கள் வீடுகளையும் சுற்றுப்புறத்தையும் சுத்தம் செய்யும் வாய்ப்பு இல்லை. எனவே, நுளம்புகள் பெருகும் இடங்களை சுத்தம் செய்யும் வாய்ப்பு இல்லை.

இதனால், நுளம்புகள் பெருக்கம் அதிகரித்துள்ளது.

டெங்கு, சிக்குன்குனியா நோய்கள் ஒரே நுளம்பால் பரவுகின்றன. எனவே, சுற்றுப்புறத்தை தொடர்ந்து சுத்தம் செய்வதன் மூலம் நுளம்பு பெருக்கத்தைத் தடுக்க பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகின்றன - என்றார்.

# கருணாவின் ஆட்களை இராணுவ முகாம்களில் வைத்திருக்கவில்லை!

## சரத் பொன்சேகா சொல்கிறார்

கொழும்பு, ஏப். 21

இராணுவ முகாம்களுக்குள் கருணாவின் ஆட்களை நாம் வைத்திருக்கவில்லை. அத்துடன், புலிகள் அமைப்பில் இருந்து பிரிந்த கருணா, பிள்ளையான் இருவரும் பிரபாகரனின் இருப்பிடம் தொடர்பில் இராணுவத்துக்கு எந்தவித தகவலையும் வழங்கவில்லை என்று வன்னி இறுதிப் போர் தளபதியான சரத் பொன்சேகா கூறியுள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே இவ்வாறு கூறியுள்ளார். மேலும், புலிகள் அமைப்பில் இருந்து விலகிய படையினருக்கு எதிராக சண்டையிட்டிருந்தாலும் பிரபாகரன் எங்கிருந்தார் என்ற தகவலைக் கூட கருணா எமக்கு வழங்கவில்லை.

இதேபோல, நான் போர் செய்த வியூகத்துக்கு அமைய எனக்கு உளவு தகவல்கள் தேவைப்படவும் இல்லை. ஏனெனில், நாம் தலையை தூக்கும்போது எமக்கு அருகில் பயங்கரவாதிகள் இருந்தனர். எனவே, உளவு தகவல்கள் அப்போது தேவைப்பட்டிருக்கவில்லை. எதிரிகள் எங்கு இருக்கின்றார்கள் என கருணாவிடம் கேட்கவேண்டிய தேவையும் இருக்கவில்லை.

வாழைச்சேனைக்கு மேல் கஜுவத்தை என்று ஒரிடம் உள் ளது. அந்த இடத்தில் மாத்தி ரமே கருணாவின் படை பயன்ப டுத்தப்பட்டது. அதுவும் பிரதே சம் தொடர்பில் அனுபவம் இருக்கும் என்பதால் அவர் கள் பயன்படுத்தப்பட்டனர்.

எப்போதும் கருணா, பிள்ளையான் எமக்கு உளவு தகவல்களை வழங்கவில்லை. புலிகள் தாக்குதல் நடத்தும்போது புலம்பெயர் தமிழர்கள் சிலர் கொண்டாட்டங்களில் ஈடுபடுவார்கள். புலிகள் அமைப்புடன் மோதினாலும், புலிகள் தமிழர்களின் இராணுவம் என்ற உணர்வு கருணா, பிள்ளையா னிடமும் இருந்தது. இராணுவ முகாம்களுக்குள் கருணாவின் ஆட்களை நாம் வைத்திருக்க வில்லை - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறு மாத கால ஆட்சியில் ரூ. 60 ஆயிரம் கோடி கடன்!

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 21

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆறு மாதங்களில் 60 ஆயிரம் கோடி ரூபாய் கடன் பெற்றுள்ளது. இதனை மீள செலுத்தும் சவாலை இந்த அரசாங்கம் எவ்வாறு எதிர்கொள்ள வுள்ளது என்பது புரியவில்லை. இந்த சுமையும் மக்களிமீதே சுமத்தப்படும். அந்த வகையில் 2028இல் மீண்டுமொரு கடன் மறுசீரமைப்புக்கு செல்ல வேண்டியேற்படும் - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாரா ளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேன சிங்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பணிமனை யில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண் டவாறு தெரிவித்தார்.

தம்மிடம் ஆட்சியை ஒப்ப டைத்தால் ஆறு மாத காலம் போதும் என தேர்தலுக்கு முன் னர் அநுரகுமார திஸநாயக்க குறிப்பிட்டிருந்தார். ஆனால், தற்போது ஆறு மாதங்கள் கடந் துள்ளபோதிலும் நாட்டில் எவ் வித மாற்றமும் இடம்பெற்ற தாக தெரியவில்லை.

மக்கள் எதிர்பார்த்த மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்பதை அவர் களிடமே கேட்கின்றோம். ஜனாதிபதி அநுர குமார திஸ நாயக்க பொய்களைக்கூறிக் கொண்டிருந்தாலும் முன்னாள் ஜனாதிபதி ரணிலின் வேலைத் திட்டங்களையே நாம் முன்னெ டுத்துச் செல்கின்றோம் என லால் காந்த உண்மையை ஏற் றுள்ளார்.

60 ஆயிரம் கோடி ரூபாயை இந்த அரசாங்கம் கடனாகப் பெற்றுள்ளது. இது வெளிநாட் டுக் கடன் இல்லை என்ற போதி லும், இதனையும் அரசாங்கம் மீள செலுத்த வேண்டும். சுற் றுலாத்துறை தவிர்ந்த வேறு எந்த வருமானமும் இன்றி அர சாங்கம் எவ்வாறு இந்த நிலை மையை எவ்வாறு சமாளிக்கப் போகிறது என்பது கேள்விக்குரி யாகவே உள்ளது.

அதானி மற்றும் எலான் மஸ்க் போன்றவர்களின் முதலீ டுகளுக்கு ஜே. வி. பி. கடந்த காலங்களில் கடும் எதிர்ப்பை வெளியிட்டது. ஆனால், இன்று அவர்கள் உலகில் பலம்மிக்கவர் களாகவுள்ளனர். அந்த முதலீடு களை தக்க வைத்திருந்தால் பெரும் நன்மைகளைப் பெற்றி ருக்கலாம்.

இந்த சுமைகள் அனைத்தும் இறுதியில் மக்கள் மீதுதான் சுமத்தப்படும். 2028 ஆம் ஆண்டு மீண்டுமொரு கடன் மறுசீரமைப்புக்கு செல்ல வேண்டியேற்படும். கோட்டா பயவின் அரசாங்கத்தைப் போன்று இந்த அரசாங்கமும் விரைவில் வீழ்ச்சியடையும்- என்றார். (ஐ)

# 94 ஆயிரம் சுற்றுலாவிகள் 15 நாட்களில் மட்டும் வருகை!

கொழும்பு, ஏப். 21

இந்த மாதத்தில் முதல் 15 நாட்களில் மட்டும் 93 ஆயி ரத்து 915 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ள னர்.

இதன்படி, ஜனவரி முதலாம் திகதியில் இருந்து ஏப்ரல் 15 ஆம் திகதி வரையான காலப்ப குதிக்குள் 8 இலட்சத்து 16 ஆயி ரத்து 191 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள் ளனர்.

இந்தியாவிலிருந்தே அதிக சுற்றுலாவிகள் வருகை தந்துள் ளனர். அங்கிருந்து ஒரு இலட் சத்து 36 ஆயிரத்து 535 சுற் றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

ரஷ்யாவிலிருந்து ஒரு இலட்சத்து 2 ஆயிரத்து 273 பேரும் ஐக்கிய இராச்சியத்தி லிருந்து 81 ஆயிரத்து 130 பேரும் ஜேர்மனியிலிருந்து 57 ஆயிரத்து 947 பேரும் சீனா விலிருந்து 43 ஆயிரத்து 5 பேரும் பிரான்ஸிலிருந்து 48 ஆயிரத்து 24 பேரும் அவுஸ் திரேலியாவிலிருந்து 33 ஆயி ரத்து 957 பேரும் இலங்கைக்கு சுற்றுலா வந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (ஐ)

# போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் கைது

கொழும்பு, ஏப். 21

12 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கொழும்பு கல்கி சையில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்கிசை குற்றப் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த இரகசிய தக வலின் அடிப்படையில் நேற்று முன்தினம் இந்த இளைஞர் கைது செய்யப்பட்டார்.

28 வயது இளைஞரே இவ் வாறு கைது செய்யப்பட்டார். அவரிடம் மேலதிக விசாரணை களை கல்கிசை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பொலிஸ் கான்ஸ்டபிள் வீதி விபத்தில் மரணம்!

கொழும்பு, ஏப். 21

மோட்டார் சைக்கிள் மின் கம்பத்துடன் மோதிய விபத் தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்தார்.கம்பஹா - நிட்டம்புவை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 32 வயது பொலிஸ் கான்ஸ்டபிளே உயிரிழந்தார். அவர் தனது கடமைகளை முடித்துவிட்டு வீடு நோக்கி சென்றபோதே இந்த விபத்து இடம்பெற்றுள் ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள்:

# சூத்திரதாரிகளை கண்டுபிடிப்பதற்கு ஆசாத் மௌலானவை விசாரியுங்கள்!

### அருட்தந்தை ஜூட் கிருசாந்த



கொழும்பு, ஏப். 21

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் சூத்திரதாரிகளை கண் டுபிடிப்பதற்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் செயலாளர் ஆசாத் மௌ லானாவை விசாரணை செய்யவேண்டும் என்று கொழும்பு மறைமாவட்ட தொடர்பாடல் இயக்குநர் அருட்தந்தை ஜூட் கிருசாந்த வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் கள் சூத்திரதாரிகளை கண்டு பிடிப்பதற்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவ நேசதுரை சந்திரகாந்தனின் செயலாளர் ஆசாத் மௌலானா முக்கியமானவராக காணப்படு கின்றார். சனல் 4 ஆவணப் படத்துக்கு தகவல்களை வழங் கிய ஆசாத் மௌலானாவை விசாரணை செய்தால் பல விவரங்கள் தெரிய வரலாம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் விசாரணைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து அதிகாரிகள் கிறிஸ்தவ திருச்சபையுடன் தகவல்களை வழங்கி வருகின்றனர்.

விசாரணைகள் இடம்பெ றும்விதம் குறித்து நாங்கள் திருப்தியடைந்துள்ளோம். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் சுமார் 25 பேர் இதுவரை கைது செய்யப்பட் டுள்ளனர். இவர்களில் சிலர் இந்த சம்பவம் தொடர்பில் முக்கிய தகவல்கள் தெரிந்தவர் கள்.

கத்தோலிக்க சமூகத்தினரும் இலங்கையர்களும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் பாதிக் கப்பட்டவர்கள் நீதிக்காக காத் திருக்கின்றனர். ஜனாதிபதி இந்தத் தாக்குதல்கள் குறித்த உண்மைகளை வெளிப்படுத்து வார் விசாரணைகளை முன்னெ டுத்து செல்வார் என அவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர் - என்றார். (ஐ)

# சடலம் மீட்பு!

சிலாபம், ஏப். 21

சிலாபம் கடற்கரையில் முதியவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

5 அடி 4 அங்குலம் உயர முடைய வயோதிபர் ஒருவரே சடலமாக மீட்கப்பட்டார். அவரின் சடலம் அடையாளம் காணப்படவில்லை என்று சிலா பம் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், மீட்கப்பட்ட சட லம் சிலாபம் மருத்துவமனை யின் பிரேத அறையில் வைக் கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கார் மோதியதில் குடும்பஸ்தர் பலி!

கொழும்பு, ஏப். 21

வீதியின் குறுக்காக ஓடிய கார் மோட்டார் சைக்கிளை மோதியதில் ஒருவர் உயிரி ழந்தார்.

மொனராகலை - வெல்ல வாய வீதியில் நேற்று முன்தி னம் இந்த விபத்து இடம்பெற் றுள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த சகோ தரர்கள் இருவர் காயமடைந் தனர்.

இதில், படுகாயமடைந்த ஒருவர் மொனராகலை பொது மருத்துவமனையில் சேர்க்கப் பட்ட நிலையில் உயிரிழந்தார். இந்த சம்பவத்தில் 22 வயதான இளம் குடும்பஸ்தரே உயிரிழந் தார். (ஐ)

# இந்தியாவின் ஆயுத களஞ்சியமாக இலங்கையை பயன்படுத்த அனுமதி!

### இது பெரும் அச்சுறுத்தல் என்கிறார் ஹிருணிகா



கொழும்பு, ஏப். 21

இந்தியாவில் அவசர யுத்த நிலைமை ஏற்படும் பட்சத்தில் இலங்கையில் ஆயுதங்களை களஞ்சியப்படுத்துவதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டுள் ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது நாட்டின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக அமை யும். எனவே இதன் உண்மை தன்மை தொடர்பில் அரசாங் கம் நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும் - இவ்வாறு முன் னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்தார்.

கொழும்பில் நிகழ்வு ஒன் றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், ஜெனிவாவுக்கான இலங்கையின் முன்னாள் வதிவி டப்பிரதிநிதியான தயான் ஜய திலக இந்தியாவுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பில் தெரிவித்திருக்கின் றார்.

இதற்கமைய குறித்த 7 ஒப் பந்தங்களில் ஒன்று இந்தியாவில் அவசர யுத்த நிலைமை ஏற்படும் பட்சத்தில் இலங்கை யில் ஆயுதங்களை களஞ்சியப்ப டுத்துவதற்கான இணக்கப்பா டாகும். இதில் உள்ள அபாய நிலைமையை புரிந்து கொள்ள வேண்டும். இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுக்குமிடையே மோதல்கள் காணப்படுகின்றன.

அவை தீவிரமடைந்து யுத்த நிலைமை ஏற்பட்டால் இலங் கைக்கு எத்தகைய பாதிப்புகள் ஏற்படும் என்று சிந்திக்க வேண் டும். தேவையற்ற பிரச்னைக ளில் நாமே போய் சிக்கிக் கொள்கின்றோம்.

முந்தைய அரசாங்கங்கள் மிகத் தெளிவாக அணிசேரா வெளிநாட்டு கொள்கையைப் பின்பற்றின. ஆனால், தற்போதைய அரசாங்கம் அவ்வாறல்ல. நாம் இந்தியாவுடன் சிறந்த உறவைப் பேண வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், தேவைக்கு அதிகமாக இடத்தை வழங்கும் போது பிரச்னைகள் தோற்றம் பெறும்.


ஜே. வி. பியினர் எதிர்க்கட்சி யாக இருந்தபோது இந்தியாவை கடுமையாக எதிர்த்து விமர்சித் ததால் தற்போது அதனை சரி செய்வதற்காக இவ்வாறான ஒப் பந்தங்களில் கையெழுத் திட்டுள்ளனர். இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள 7 ஒப்பந்தங்களின் உள்ளடக்கங் கள் என்ன என்பதை அமைச்ச ரவையோ, பாராளுமன்றமோ அறிந்திருக்கவில்லை.

இது குறித்து அரசாங்கத் திடம் கேள்வியெழுப்பிய போது தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஊடாக அறிந்து கொள்ளுமாறு கூறுகின்றனர். பாதுகாப்புடன் தொடர்பு டைய விடயங்கள் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் வழங்கப்படாது என்பது அரசாங்கத்துக்கு தெரியாதா? இவை தொடர்பில் நாட்டுக்கு தெளிவுபடுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ தேவாலயங்களில்

# பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் உயிர்த்த ஞாயிறு தின வழிபாடு



தேவாலயங்களில் பொலிஸார், இராணுவத்தினர் இணைந்து பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்

மட்டக்களப்பு, ஏப். 21


**மட்டக்களப்பில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் நேற்றுக் காலை பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் உயிர்த்த ஞாயிறு தின விசேட ஆராதனைகள், வழிபாடுகள் இடம்பெற்றன.**

நேற்று உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் விசேட ஆராதனைகள் இடம்பெற்றன.

கடந்த 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தில் மட்டக்களப்பு சீயோன் தேவாலயம் உட்பட பல இடங்களில் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதில், 250 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் மட்டும் 31 பேர் கொல்லப்பட்டனர். இந்த நிலையில், 2019 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உயிர்த்த ஞாயிறு தினத்தில் நாட்டிலுள்ள அனைத்து கிறிஸ்தவ தேவாலங்களிலும் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் காத்தான்குடிக்கு பயணம்



காத்தான்குடி, ஏப். 21

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் பஹீம் உல் அஜீஸ், மட்டக்களப்பு - காத்தான்குடி அல் அக்ஸா பள்ளிவாசலுக்கு நேற்று முன்தினம் சென்றார்.

இதன்போது, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம். ஹிஸ்புல்லா, பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரை வரவேற்று நட்பு ரீதியிலான கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இந்த நிகழ்வில், பள்ளிவாசல் நிர்வாகத்தினர், முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (எ)

# ஜனாதிபதி அநுரவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்

தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் சுமந்திரன் கோரிக்கை



மட்டக்களப்பு, ஏப். 21

தேர்தல் இலஞ்சத்தை ஜனாதிபதியே வழங்குவதை வன்மையாக கண்டிப்பதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு இதற்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு லயன்ஸ் வீதியில் அமைந்துள்ள தமிழ் அரசுக் கட்சியின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அன்னை பூபதியின் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், "தேர்தலில் வெற்றி பெறவேண்டும் என்பதற்காக கீழ் நிலைக்கு இறங்கி ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க பொய்களைக் கூறுகின்றார்.

தேர்தல் விதிமுறைகளை ஜனாதிபதியே மீறும் நிலையில் மக்கள் அதற்கு எதிராக வாக்களிக்க வேண்டும்"- என்றார். (எ)

# அரசின் வாக்குறுதிகள் இன்று வெறும் புஸ்வாணமாகிவிட்டன

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் சாடல்

மூதூர், ஏப். 21

திசைகாட்டி அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகள் இன்று வெறும் புஸ்வாணமாகிவிட்டன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிமித்தம் திருகோணமலை, மூதூர் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சஜித் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

"ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களின் போது மக்கள் மத்தியில் பல எதிர்பார்ப்புகளையும் நம்பிக்கைகளையும் வழங்கிய அரசாங்கம் தமது தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளையும், கொள்கைகளையும் இன்று முழுப் பொய்யாக மாற்றியுள்ளது. நாட்டு மக்கள் தற்போது மிகவும் சிரமத்துடன் வாழ்ந்து வருவதுடன் பொருட்களின் விலைகளும் அதிகரித்து காணப்படுகின்றன. மின்கட்டணத்தை 33 சதவீதம் குறைப்போம் என்று இந்த ஆளும் தரப்பினர் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் கூறினர். மக்கள் எழுப்பிய குரலால் தான் மின்கட்டணம் 20 சதவீதம் குறைக்கப்பட்டன. அரசாங்கம் தீர்மானம் எடுத்து இதனை நிறைவேற்றவில்லை. மக்களின் கருத்துக்களுக்கு ஏற்பவே இது குறைக்கப்பட்டது. எஞ்சிய 13 சதவீதம் குறைப்பை இந்த அரசாங்கம் விரைந்து எடுக்க வேண்டும். எரிபொருள் விலைகள் தொடர்பில் அரசாங்கம் இவ்வாறான கொள்கைகளையே பின்பற்றி வருகிறது.

மனித - காட்டு யானை மோதலுக்கு புதிய தீர்வுகள் இந்த அரசாங்கத்திடமில்லை. உடமைகள், உயிர்கள் மற்றும் பயிர்ச் சேதங்களுக்கு இழப்பீடுகள் வழங்கியபாடுமில்லை. இவர்கள் மேடையில் பொய், ஏமாற்று, கேவலமான அரசியலையே செய்து வந்தனர் என்பது இன்று நிருபனமாகி வருகிறது.

ஐக்கிய மக்கள் சக்தியே முஸ்லிம் மக்களின் கலாசார மற்றும் மத உரிமையான தகனமா? அடக்கமா? என்ற பிரச்னை எழுந்த போது அவர்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்தது. தற்போதைய அரசாங்கத்தை [illegible] அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட இந்த உரிமைக்காக குரல் எழுப்பவில்லை. ஐக்கிய மக்கள் சக்தி மாத்திரமே இந்த உரிமைக்காக [illegible] எழுப்பிய ஒரே [illegible] தேசிய [illegible]. இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் [illegible] இழப்பீடு பெற்றுக் [illegible] ஜனநாயக ரீதியில் போராடுவோம்.

பலஸ்தீன மக்களின் உரிமைகளுக்காக ஐக்கிய மக்கள் சக்தி அன்றும் இன்றும் நாளையும் என என்றுமே முன்நிற்கும். இந்த மக்கள் ஜனநாயக பலஸ்தீன அரசாங்கத்தின் கீழ் வாழ வேண்டும். இந்த நாட்டு மக்களுக்கு தமது கருத்துக்களைப் பேசுவதற்கும் வெளிப்படுத்துவதற்கும் உரிமைகள் காணப்படுகின்றன. இந்த உரிமைகளை யாராலும் தடை செய்ய முடியாது"- என்றார். (எ)

# இலங்கையுடன் உறவை வலுப்படுத்த வேண்டும்

## பாக். உயர்ஸ்தானிகர் விருப்பம்

கல்முனை, ஏப். 21

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் பஹீம் உல் அஜீஸ் தெரிவித்தார்.

ரஹ்மத் பௌண்டேஷன் அனுசரணையில் இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரின் பங்களிப்புடன் கல்முனை பிராந்தியத்தில் உள்ள வறிய குடும்பங்களுக்கான வாழ்வாதார உலர் உணவுப்பொருட்கள் வழங்கும் நிகழ்வு கல்முனை மயோன் பிலாசா திருமண மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேலும் கூறுகையில்,

"கல்வித் துறையில் இலங்கை மக்கள் கவனம் செலுத்த வேண்டும்.

இதே வேளை, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வளர்ப்பது தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான நெருங்கிய உறவை நான் பெரிதும் மதிக்கின்றேன் - பாராட்டுகிறேன்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த உங்களுடன் நெருக்கமாக பணியாற்ற நான் எதிர்பார்க்கிறேன்.

இது நம் இரு நாடுகளுக்கும் நல்ல நிகழ்வுகளை ஏற்படுத்தும் என்று நான் நம்புகிறேன்"- என்றார். (எ)

# "அஸ்மினை அழைத்து வந்து உடன் விசாரிக்க வேண்டும்"

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் ஜம்மியதுல் உலமாவை சம்பந்தப்படுத்தும் ஐயூப் அஸ்மினை இலங்கை அரசு நாட்டுக்கு வரவழைத்து விசாரணை செய்ய வேண்டும்.

ஈஸ்டர் தாக் குதலில் அகில இலங்கை ஜம் மியதுல் உலமாவை சம்பந்தப் படுத்துவதை உலமா கட்சி வன்மையாக கண்டித்துள்ளது என அந்தக் கட்சித்தலைவர் முபாறக் அப்துல் மஜீத் முப்தி தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

"ஈஸ்டர் தாக்குதல் விடயத்தில் ஜம்மியதுல் உலமாவுக்கு சம்பந்தம் இருப்பதாக வடக்கு மாகாண சபையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினராக செயல்பட்ட அஸ்மின் கூறியிருப்பது முட்டாள்தனமான கருத்தாகும். இதை உலமா கட்சி வன்மையாக கண்டிப்பதுடன் இதற்கான சரியான ஆதாரங்களை அவர் முன்வைக்க வேண்டும். வெளிநாட்டில் இருக்கும் அவரை அரசு நாட்டுக்கு வரவழைத்து விசாரணை செய்து, அவர் பொய் கூறியிருந்தால் தண்டனை வழங்கப்பட வேண்டும். - என்றார். (எ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளர்ச்சியாளர்களை குறி வைத்து அமெரிக்கா வான்வழித் தாக்குதல்

சனா, ஏப். 21

**ஏமனின் ஹொடைடா துறைமுகம் மற்றும் விமான நிலையம் உள்ளிட்ட 13 இடங்களில் அமெரிக்கா வான்வழித் தாக்குதல் நடத்தியது. ஹவுதி கிளர்ச்சியாளர்களை குறி வைத்தே தாக்குதல் நடத்தப்பட்டது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.**

காஸா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 51 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் பலியாகினர். ஓர் இலட்சத்து 16 ஆயிரம் பேருக்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

பலஸ்தீனியர்களுக்கு ஆதரவாக, ஹவுதி கிளர்ச்சியாளர் அமைப்பு செயல்பட்டு வருகிறது. அத்தோடு, இஸ்ரேல் மீது தாக்குதலை தொடுத்து வருகிறது. செங்கடலில் பயணிக்கும் சரக்கு மற்றும் பயணிகள் கப்பல்களை மறித்து, தாக்குதலை நடத்தி வருகிறது. இந்த நிலையில், ஹவுதி கிளர்ச்சியாளர்களை கட்டுப்படுத்தும் நோக்கில் அமெரிக்கா, கிளர்ச்சியாளர்களின் ஆதிக்கம் நிறைந்த ஏமனின் பல பகுதிகளின் மீது கடுமையாக தாக்குதல் நடத்தி வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, ஏமனில் உள்ள ராஸ் இசா துறைமுகம் மீது அமெரிக்கா சரமாரி தாக்குதல் நடத்தியது. இதில், 74 பேர் உயிரிழந்தனர். 171 பேர் காயமடைந்தனர்.

இந்தச் சூழலில், அமெரிக்கா மீண்டும் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. ஏமனின் ஹொடைடா துறைமுகம் மற்றும் விமான நிலையம் என 13 இடங்களில் நேற்று முன்தினம் அமெரிக்கா வான்வழித் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில், 3 பேர் உயிரிழந்தனர். 4 பேர் காயமடைந்தனர்.

ஏமன் தலைநகர் சனாவின் அல்-தாவ்ரா, பனி மதர் மற்றும் அல்-சபியா மாவட்டங்களில் இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதில் பல உயிரிழப்புகள் ஏற்பட்டன.

செங்கடலில் கப்பல்களை மறித்து, தாக்கும் ஹவுதி கிளர்ச்சியாளர்களை தடுத்து நிறுத்தும் இலக்கை அடைவதற்காக அதிகளவில் படைகளை பயன்படுத்துவோம் என ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்த நிலையில் அமெரிக்காவின் தாக்குதல் தீவிரமடைந்துள்ளது. எனினும், இஸ்ரேல் தாக்குதலை நிறுத்தும் வரை பலஸ்தீனிய மக்களுக்கு ஆதரவாக நாங்களும் தாக்குதல் நடத்துவோம். ஆயுதங்களை கீழே போடமாட்டோம் என ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ)

# போர் நிறுத்தத்தை மீறி ரஷ்யா கடும் தாக்குதல்

## உக்ரைன் ஜனாதிபதி குற்றச்சாட்டு

கீவ், ஏப். 21

போர் நிறுத்தத்தை மீறி ரஷ்யா கடும் தாக்குதல் நடத்தி வருவதாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி குற்றஞ்சாட்டியுள்ளார்.

உக்ரைன் - ரஷ்யா இடையேயான போர் 3 ஆண்டுகளாக நீடித்து வருகிறது. இந்தப் போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர்.

போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகள் முயற்சித்தன. ஆனால், அந்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்த நிலையில் போர் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இதனிடையே, கிறிஸ்தவ மதத்தினரின் முக்கிய நிகழ்வான ஈஸ்டர் பண்டியையொட்டி 30 மணிநேரம் தற்காலிக போர் நிறுத்தத்தை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தாமாக முன்வந்து அறிவித்தார். நேற்று



முன்தினம் சனிக்கிழமை மாலை 06.00 மணிமுதல் நேற்று ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 12.00 மணிவரை உக்ரைன் மீது தாக்குதல் நடத்தமாட்டோம் என்று ரஷ்யா அறிவித்தது.

இந்த நிலையில், தற்காலிக போர் நிறுத்தத்தை மீறி ரஷ்யா தொடர்ந்து தாக்குதல் நடத்துவதாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி குற்றஞ்சாட்டியுள்ளார். எல்லை நகரங்களான குர்ச்க், பெல்கொரெட் போன்ற மாகாணங்களில் ரஷ்ய படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதாக ஜெலன்ஸ்கி குற்றஞ்சாட்டியுள்ளார். (எ)

# நைஜீரியாவில் இரு தரப்பு இடையே கடும் மோதல், 56 பேர் உயிரிழந்தனர்

அபுஜா, ஏப். 21

நைஜீரியாவில் விவசாயிகளுக்கும் கால்நடை பராமரிப்பாளர்களும் இடையே கடும் மோதல் ஏற்பட்டுள்ளது. இதனால், 56 பேர் உயிரிழந்தனர்.

ஆபிரிக்க நாடான நைஜீரியாவின் பினு மாகாணத்தில் விவசாயிகளுக்கும் கால்நடை பராமரிப்பாளர்களும் இடையே பல மாதங்களாக மோதல் போக்கு நிலவி வருகிறது. இது மத ரீதியிலான மோதலாக உருவெடுத்து வருகிறது. கிறிஸ்தவ மதத்தை சேர்ந்தவர்கள் அதிகளவில் விவசாயத்திலும் இஸ்லாமிய மதத்தை சேர்ந்தவர்கள் கால்நடை பராமரிப்பு பணியிலும் ஈடுபட்டு வருகின்றனர். இரு தரப்பினருக்கும் இடையே ஏற்படும் மோதலில் உயிரிழப்பு சம்பவங்களும் அரங்கேறி வருகின்றன.

இந்த நிலையில், நேற்று முன்தினம் பினு மாகாணம் குவம், லொகோ ஆகிய பகுதிகளில் விவசாயிகளை குறிவைத்து கால்நடை பராமரிப்பாளர்கள் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 56 பேர் உயிரிழந்தனர். தாக்குதலை தொடர்ந்து அப்பகுதிகளில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.(எ)

# மேலும் 26 ரபேல் போர் விமானங்களை பிரான்ஸிடமிருந்து வாங்கும் இந்தியா!

புதுடில்லி, ஏப். 21

பிரான்ஸிடமிருந்து மேலும் 26 ரபேல் போர் விமானங்களை இந்தியா வாங்கவுள்ளது.

இதன் மூலம், இந்தியாவில் உள்ள ரபேல் போர் விமானங்களின் எண்ணிக்கை 62 ஆக அதிகரிக்கும்.

இந்தியா, பிரான்ஸ் இடையே 2016ஆம் ஆண்டு ரபேல் போர் விமானம் தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்தானது. அந்த ஒப்பந்தப்படி பிரான்ஸிடமிருந்து 36 ரபேல் போர் விமானங்களை இந்தியா கொள்முதல் செய்தது.

இதனிடையே, பிரான்ஸிடமிருந்து மேலும் 26 ரபேல் போர் விமானங்களை வாங்க இந்தியா முடிவு செய்தது. இந்த போர் விமானங்களை வாங்குவது தொடர்பில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் கடந்த 9ஆம் திகதி நடைபெற்ற மத்திய அமைச்சரை சபை கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இந்த நிலையில், பிரான்ஸிடமிருந்து மேலும் 26 ரபேல் போர் விமானங்களை வாங்குவது தொடர்பான ஒப்பந்தம் எதிர்வரும் 28ஆம் திகதி கையெழுத்தாகவுள்ளது. புதுடில்லியில் உள்ள பாது காப்புத் துறை தலைமையிடத் தில் ரபேல் போர் விமான கொள்முதல் தொடர்பான ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையே கையெழுத்தாகவுள்ளது. இந்த போர் விமானங் கள் கடற்படையுடன் இணைக்கப்படவுள்ளன. (எ)

# இந்தியாவிலிருந்து அதிக பொருட்களை இறக்குமதி செய்வதற்கு சீனா தயார்!

பீஜிங், ஏப். 21

இந்தியாவிலிருந்து அதிக பொருட்களை இறக்குமதி செய்வதற்கு சீனா தயாராகவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றது முதல் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். அதில், அமெரிக்கப் பொருட்களுக்கு விதிக்கப்படும் அளவுக்கு அதே வரியை, வரி விதிக்கும் நாடுகள் மீதும் விதிப்பதாக ட்ரம்ப் அறிவித்தார். இதன்படி, கடந்த 9 ஆம் திகதி பரஸ்பர வரி விதிப்பு அமுலுக்கு வந்தது. இலங்கை மீது 44 சதவீதமும் இந்தியா மீது 26 சதவீதமும் வரியை விதித்தார்.

வல்லரசு நாடான அமெரிக்காவின் இந்த வரி விதிப்பால் பங்குச்சந்தைகள் ஆட்டம் கண்டன. பல்வேறு நாடுகளும் வரி விதிப்புக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்ததால் தற்போது பேச்சுகள் நடத்த ஏதுவாக 90 நாட்களுக்கு வரி விதிப்பை நிறுத்தி வைத்துள்ளார். எனினும், சீனா மீது மட்டும் விதிக்கப்பட்ட வரி விதிப்பை நிறுத்தி வைக்கவில்லை. மாறாக வரி விதிப்பை அதிகப்படுத்தியுள்ளார். சீன இறக்குமதிகள் மீது அமெரிக்கா 245சதவீதம் வரை வரிகளை விதித்துள்ளது. சீனாவின் பதிலடி வர்த்தக நடவடிக்கைகளுக்கு பதிலளிக்கும் விதமாக இந்த அறிவிப்பை கடந்த 19 ஆம் திகதி அமரிக்கா வெளியிட்டது.

அமெரிக்கா தற்போது அதிகளவு வரியை விதித்திருக்கக் கூடிய நிலையில், இந்தியாவின் பக்கம் சீனா தனது கவனத்தை திருப்பியிருக்கிறது. அதாவது, இந்தியாவிலிருந்து அதிக பொருட்களை இறக்குமதி செய்யத் தயார் எனவும், இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறையை போக்கும் வகையில், சீன சந்தைக்குள் இந்தியப் பொருட்களை இறக்கி இந்திய தொழில்களுக்கு உதவத் தயாராக உள்ளதாகவும் இந்தியாவுக்கான சீனத் தூதுவர் ஷூபியூஹாங் தெரிவித்துள்ளார். (எ)

# காஸாவில் இரண்டே நாட்களில் 90 பலஸ்தீனர்கள் உயிரிழந்தனர்

காஸா, ஏப். 21

இஸ்ரேல் நடத்திய கொடூரத் தாக்குதலால் காஸாவில் இரண்டே நாட்களில் 90இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் காலாவதியான நிலையில் காஸா மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது.

பணயக் கைதிகளை மீட்கவும், ஹமாஸ் அமைப்பினரை முழுமையாக ஒழிக்கும் நோக்கிலும் காஸா முனையில் இஸ்ரேல் தொடர்ந்து தரைவழி, வான்வழித் தாக்குதலை நடத்தி வருகிறது. இந்தப் போரில் பலஸ்தீனத்தை சேர்ந்த அப்பாவி பொதுமக்கள் பலர் படுகொலை செய்யப்பட்டனர்.

2 ஆண்டுகளுக்கு மேல் நீடித்து வரும் போரில், காஸாவில் இதுவரை உயிரிழந்தோர் எண்ணிக்கை 51 ஆயிரமாக அதிகரித்துள்ளது. இந்த நிலையில், நேற்றுக்காலை 09.00 மணியுடன் நிறைவடைந்த கடந்த 48 மணி நேரத்தில் காஸாவில் இஸ்ரேலிய தாக்குதல்களில் 90இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக காஸா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. மேலும், இறந்தவர்களில் குறைந்தது 15 பேர் ஒரே இரவில் கொல்லப்பட்டனர் என்றும், அவர்களில் பெண்கள் மற்றும் குழந்தைகள் அடங்கு வர் என்றும், சிலர் நியமிக்கப் பட்ட மனிதாபிமான மண்ட லத்தில் தஞ்சம் புகுந்ததாக மருத்துவமனை ஊழியர்கள் தெரிவித்தனர். (எ)

# விமானப் பயணிகள் போக்குவரத்தில் சீனாவை பின்னுக்கு தள்ளும் இந்தியா

புதுடில்லி, ஏப். 21


விமானப் பயணிகள் போக்குவரத்தில் 2026ஆம் ஆண்டில் சீனாவை இந்தியா முந்திச் செல்லும் என்று சர்வதேச விமான நிலைய பேரவை (ஏ.சி.ஐ.) தெரிவித்துள்ளது. உலகின் வேகமான சிவில் விமானப் போக்குவரத்து சந்தைகளில் ஒன்றாக இந்தியா உள்ளது. இதன் விமானப் பயணிகள் போக்குவரத்தின் வளர்ச்சி விகிதம் இந்த ஆண்டு 10.1 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது சீனாவுக்கான மதிப்பீடான 12 சதவீதத்தை விட குறைவாகும். இந்தியாவுடன் ஒப்பிடுகையில் சீனாவுக்கு மிகப் பெரிய விமானச் சந்தை உள்ளது.

இந்த நிலையில் ஏ.சி.ஐ. அமைப்பின் ஆசியா பசிபிக் மற்றும் மத்திய கிழக்கு பிராந்திய இயக்குநர்ஸ்டெபனோ பரோன்சி, இந்தியாவின் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் கூறுகையில், விமானப் போக்குவரத்து உட்கட்டமைப்பை இந்தியா தொடர்ந்து மேம்படுத்தி வருகிறது. மேலும், விமானப் பயணிகள் போக்குவரத்தில் ஒரு வளர்ந்து வரும் சந்தையாக இந்தியா உள்ளது. இந்தியாவின் விமானப் பயணிகள் வளர்ச்சி விகிதம் 2026இல் 10.5 சதவீதமாகவும் 2027இல் 10.3 சதவீதமாகவும் இருக்கும் என ஏ.சி.ஐ. மதிப்பிட்டுள்ளது. அதே நேரத்தில் சீனாவின் வளர்ச்சி விகிதம் முறையே 8.9 சதவீதம் மற்றும் 7.2சதவீதமாக இருக்கும். எனவே 2026இல் சீனாவை இந்தியா முந்தும்.

2023 - 2027இல் இந்தியாவின் விமானப் பயணிகள் போக்குவரத்துக்கான கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம் 9.5சதவீதமாக இருக்கும். இது சீனாவின் 8.8 சதவீதத்தை விட அதிகம் ஆகும். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு ஓட்டங்கள் வித்தியாசத்தில் லக்னோ அணி போராடி வெற்றி



ஜெய்ப்பூர், ஏப். 21

ராஜஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் இறுதி வரை போராடி இரண்டு ஓட்டங்கள் வித்தியாசத்தில் லக்னோ அணி வெற்றி பெற்றது.

ஐ.பி.எல். தொடரில் ஜெய்ப்பூரில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற 2ஆவது ஆட்டத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் - லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணிகள் மோதின. இதில்,

முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ அணிக்கு தொடக்க ஆட்டக்காரரான மிட்செல் மார்ஷ் 4 ஓட்டங்களிலும், நிக்கோலஸ் பூரன் 11 ஓட்டங்களிலும், ரிஷப் பண்ட் 3 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர்.

இதனையடுத்து மார்க்ரமுடன் ஆயுஷ் பதோனி கைகோர்த்தார். இருவரும் இணைந்து அணியை சரிவிலிருந்து மீட்டனர். சிறப்பாக விளையாடிய இருவரும் அரைச்சதம் அடித்து அசத்தினர். இவர்களில் மார்க்ரம் 66 ஓட்டங்களிலும், பதோனி 50 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

இறுதிக் கட்டத்தில் அப்துல் சமத் (10 பந்துகளில் 30 ஓட்டங்கள்) அதிரடியாக விளையாடி லக்னோ அணி வலுவான நிலையை எட்ட உதவினார். குறிப்பாக சந்தீப் சர்மா வீசிய கடைசி ஓவரில் 4 சிக்ஸர்கள் விளாசி அசத்தினார்.

இதன் மூலம் 20 ஓவர்கள் முடிவில் லக்னோ அணி 5 விக்கெட்களை இழந்து 180 ஓட்டங்கள் அடித்தது. ராஜஸ்தான் தரப்பில் அதிகபட்சமாக ஹசரங்க 2 விக்கெட்கள் வீழ்த்தினார். இதனையடுத்து 181 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற வலுவான இலக்கை நோக்கி ராஜஸ்தான் களமிறங்கியது.

தொடக்க ஆட்டக்காரர் ஜெய்ஸ்வால், அதிரடியாக விளையாடி அரைச்சதம் கடந்தார். மற்றொரு தொடக்க ஆட்டக்காரரான வைபவ் சூர்யவன்ஷி, இம்பேக்ட் வீரராக களமிறக்கப்பட்டார். அவர் 20 பந்துகளில் 2 பௌண்ட்றிகள், 3 சிக்ஸர்கள் விளாசி, 34 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த நிதிஷ் ராணா 8 ஓட்டங்களில் வெளியேறினார்.

இதையடுத்து ஜெய்ஸ்வாலுடன் ரியான் பராக் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி நிதானமாக ஆடி ஓட்டங்களை குவித்த நிலையில், ஆவேஷ் கான் பந்துவீச்சில் ஜெய்ஸ்வால்(74 ஓட்டங்கள்) ஆட்டமிழந்தார். தொடர்ந்து ரியான் பராக் (39 ஓட்டங்கள்) விக்கெட்டையும் ஆவேஷ் கான் வீழ்த்தினார்.

இறுதி ஓவரில் ராஜஸ்தான் அணி வெற்றி பெற 9 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில், ஆவேஷ் கான் பந்துவீசினார். அந்த ஓவரின் 3ஆவது பந்தில், ஷிம்ரன் ஹெட்மயர் 12 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். 20ஆவது ஓவரில் ஆவேஷ் கான் 6 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்தார்.

இதன் மூலம் லக்னோ அணி இரண்டு ஓட்டங்கள் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது. அந்த அணி சார்பில் சிறப்பாக பந்து வீசிய ஆவேஷ் கான் அதிகபட்சமாக 3 விக்கெட்களை வீழ்த்தினார். (எ)



## கண் கலங்கிய சூர்யவன்ஷி

ஜெய்ப்பூர், ஏப். 21

14 வயதில் ஐ. பி. எல். போட்டியில் அறிமுகமான வைபவ் சூர்யவன்ஷி 20 பந்துகளில் 34 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்து பெவிலியன் திரும்பிய போது கண் கலங்கியபடி சென்றார்.

ஐ. பி. எல். தொடரில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற லீக் ஆட்டத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் - லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 180 ஓட்டங்கள் எடுத்தது. லக்னோ தரப்பில் அதிகபட்சமாக எய்டன் மார்க்ரம் 66 ஓட்டங்கள் எடுத்தார்.

தொடர்ந்து 181 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய ராஜஸ்தான் 20 ஓவர்களில் 178 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி கண்டது. ராஜஸ்தான் தரப்பில் அதிகபட்சமாக ஜெய்ஸ்வால் 74 ஓட்டங்கள் எடுத்தார். இந்த ஆட்டத்தில் ராஜஸ்தான் அணித் தலைவர் சஞ்சு சாம்சன் காயம் காரணமாக விளையாடவில்லை அவருக்கு பதிலாக ரியான் பராக் அணியை வழிநடத்தினார்.

மேலும், இந்த போட்டியில் ராஜஸ்தான் அணியில் வைபவ் சூர்யவன்ஷி (வயது- 14) களமிறங்கினார். அவர் 20 பந்துகளில் 34 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இதில் 3 சிக்ஸர்கள், 2 பௌண்ட்றிகள் அடங்கும். இதன் மூலம் ஐ.பி.எல். தொடரில் இளம் வயதில் அறிமுகமான வீரர் என்ற வரலாற்று சாதனையை வைபவ் சூர்யவன்ஷி படைத்துள்ளார்.

அறிமுக போட்டியிலேயே அதிரடி காட்டிய சூர்யவன்ஷிக்கு ஆதரவு பெருகி வருகிறது. இந்த நிலையில், இளம் வயதில் அறிமுகமான சூர்யவன்ஷி 20 பந்துகளில் 34 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்து பெவிலியன் திரும்பிய போது கண் கலங்கியபடி சென்றார். இந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. (எ)

அதிவேகமாக 200 சிக்ஸர்

## மாபெரும் சாதனை படைத்தார் ராகுல்



அகமதாபாத், ஏப். 21

அதிவேகமாக 200 சிக்ஸர்களை விளாசிய இந்திய வீரர் என்ற மாபெரும் சாதனையை கே. எல். ராகுல் படைத்துள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் அகமதாபாத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் டில்லி கப்பிட்டல்ஸ் - குஜராத் ரைற்றன்ஸ் அணிகள் மோதின. இதில், 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் குஜராத் அபார வெற்றி பெற்றது.

ஆட்டநாயகன் விருது பட்லருக்கு வழங்கப்பட்டது. இந்த போட்டியில் டில்லி அணியின் வீரரான கே.எல். ராகுல் 14 பந்துகளில் 28 ஓட்டங்கள் அடித்தார். இதில் ஒரு சிக்ஸரும் அடங்கும். இதன் மூலம் ஐ.பி.எல். தொடரில் கே.எல்.ராகுலின் சிக்ஸர் எண்ணிக்கை 200 ஆக உயர்ந்தது. அவர் 129 இன்னிங்ஸ்களில் 200 சிக்ஸர்கள் அடித்துள்ளார்.

இதன் மூலம் கே.எல்.ராகுல் மாபெரும் சாதனை ஒன்றை படைத்துள்ளார். அதாவது, அதிவேகமாக (இன்னிங்ஸ் அடிப்படையில்) 200 சிக்ஸர்களை விளாசிய இந்திய வீரர் என்ற மாபெரும் சாதனையை படைத்துள்ளார். இந்த பட்டியலில் கிறிஸ் கெயில் (69 இன்னிங்ஸ்) முதல் இடத்திலும், அண்ட்ரே ரசல் (97 இன்னிங்ஸ்) 2ஆவது இடத்திலும் உள்ளனர். (எ)

## டில்லி அணியை வீழ்த்தி குஜராத் அபார வெற்றி

அகமதாபாத், ஏப். 21

டில்லி அணியை வீழ்த்தி குஜராத் அணி அபார வெற்றி பெற்றது.ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் குஜராத் ரைற்றன்ஸ் - டில்லி கப்பிட்டல்ஸ் அணிகள் மோதின. அகமதாபாத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய டில்லி 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 203 ஓட்டங்கள் அடித்தது. அதிகபட்சமாக அக்சர் பட்டேல் 39 ஓட்டங்களும், அசுதோஷ் சர்மா 37 ஓட்டங்களும் அடித்தனர். குஜராத் தரப்பில் பிரசித் கிருஷ்ணா 4 விக்கெட்கள் வீழ்த்தினார்.



இதனையடுத்து 204 ஓட்டங்கள் இலக்கை நோக்கி களமிறங்கிய குஜராத் அணிக்கு தொடக்க ஆட்டக்காரரான சுப்மன் கில் 7 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றினார். பின்னர் கைகோர்த்த சாய் சுதர்சன் - பட்லர் கூட்டணி அணியை சரிவிலிருந்து மீட்டது. நிதானமாக விளையாடிய சாய் சுதர்சன் 36 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து பட்லருடன் ஷெர்பேன் ரூதர்போர்ட் ஜோடி சேர்ந்தார். இருவரும் அதிரடியாக ஆடி குஜராத் அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்து சென்றனர். டில்லி அணியின் பந்துவீச்சை வெளுத்து வாங்கிய பட்லர் அரைச்சதம் அடித்து அசத்தினார். அவருக்கு சிறப்பான ஒத்துழைப்பு கொடுத்த ரூதர்போர்ட் 43 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இருவரும் இணைந்து 119 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்தனர்.

குஜராத் அணியின் வெற்றிக்கு கடைசி ஓவரில் 10 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் ஆட்டத்தில் பரபரப்பு தொற்றிக் கொண்டது. ஸ்டார்க் வீசிய அந்த ஓவரின் முதல் பந்தை எதிர்கொண்ட தெவாட்டியா சிக்ஸருக்கு பறக்க விட்டார். அடுத்த பந்தை பௌண்ட்றிக்கு விளாசி ஆட்டத்தை முடித்து வைத்தார்.

19.2 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்களை இழந்த குஜராத் 204 ஓட்டங்கள் அடித்து அபார வெற்றி பெற்றது. பட்லர் 97 ஓட்டங்களுடனும், தெவாட்டியா 11 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். (எ)

## தீபக் சாஹரை திடீரென அடிக்க பாய்ந்த டோனி



மும்பை, ஏப். 21

10 அணிகள் இடையிலான 18ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் விடுமுறை தினமான நேற்று 2 லீக் ஆட்டங்கள் நடைபெற்றன. அதில் இரவு 07.30 மணிக்கு நடைபெற்ற லீக் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் - மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின.

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் சென்னை, மும்பை மோதல் என்றாலே எப்போதும் அனல் பறக்கும். அடுத்த சுற்று வாய்ப்பில் நீடிக்க இரு அணிகளுக்கும் இனி ஒவ்வொரு ஆட்டமும் வாழ்வா - சாவா போன்றது என்பதால் வெற்றிக்காக வரிந்துகட்டி நிற்பார்கள். இவ்விரு அணிகளும் ஏற்கனவே சென்னை சேப்பாக்கத்தில் சந்தித்த தொடக்க ஆட்டத்தில் சென்னை அணி வெற்றி பெற்றது.

இந்த நிலையில், இந்த ஆட்டத்துக்காக பயிற்சியில் ஈடுபட்டிருந்த எம். எஸ். டோனியிடம் மும்பை வீரர் தீபக் சாஹர் ஏதோ கூறி விளையாட்டாக வம்பிழுத்துள்ளார். இதையடுத்து, டோனி தனது துடுப்பு மட்டையால் தீபக் சாஹரை அடிக்க பாய்ந்தார். தொடர்ந்து இருவரும் ஜாலியாக உரையாடினர். இது தொடர்பான வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரத்தை...

தாக்குதலுடன் தொடர்புடைய மற்றும் பொறுப்புக்கூறவேண்டியவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம் - என்றும் கூறினார். (ஐ)

## இறந்தவர்கள்...

என்று பேராயரின் ஊடக தொடர்பாடல் பணிப்பாளர் அருட்தந்தை ஜூட் கிரிசாந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (ஐ)

## நாடு...

குறிப்பிடும் விதமாக உலகம் முழுவதுமுள்ள கிறிஸ்தவ மக்களால் உயிர்த்த ஞாயிறு கொண்டாடப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் மரியன்னை பேராலயத்தில் பிரதான நிகழ்வுகள் நடைபெற்றன.

இதனிடையே, நாடு முழுவதும் நேற்று பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்தன. தேவாலயங்களில் பொலிஸார், இராணுவத்தினர், விசேட அதிரடிப் படையினர் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அரசாங்கத்தின்...

அரசாங்கம் இதுவரை மேற்கொண்ட முயற்சிகளை பாராட்டுவதோடு, இந்த விடயத்தில் விரைவான மற்றும் நியாயமான விசாரணைகளின் இறுதி இலக்கு குற்றவாளிகள் யார், யார் அந்தக் கொடூரமான செயலுக்கு உதவினர் மற்றும் உடந்தையாக இருந்தனர் என்பதைக் கண்டறிவதாக இருக்க வேண்டும் என்றும் அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது. (ஐ)

## உயிர்த்த

தொடர்மாடி குடியிருப்பில் தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் நடைபெற்றன.

உயிர்த்த ஞாயிறு திருப்பலி பூசைகளில் பங்கேற்றவர்களை குறிவைத்து நீர்கொழும்பு - கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலயம், கொழும்பு கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயம், மட்டக்களப்பு சீயோன் தேவாலயம் என்பன மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதேபோன்று, காலை வேளை உணவருந்திக் கொண்டிருந்தவர்களை இலக்கு வைத்து சங்கிரி-லா, சினமன் கிராண்ட், கிங்ஸ்பரி ஆகிய நட்சத்திர விடுதிகளிலும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. தெகிவளை, தெமட்டகொடை போன்ற இடங்களிலும் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல்களில் 9 தற்கொலைதாரிகள் ஈடுபட்டிருந்தனர்.

இந்தத் தாக்குதல்களில் வெளிநாட்டவர்கள் உட்பட 260இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். 500இற்கும் மேற்பட்டவர்கள் காயங்களுக்கு உள்ளாகினர்.

இந்தத் தாக்குதலை தேசிய தௌகீத் ஜமாஅத் என்ற அமைப்பை சேர்ந்தவர்கள் மேற்கொண்டனர். இவர்கள் சர்வதேச பயங்கரவாத அமைப்பான ஐ. எஸ். ஐ. எஸ். அமைப்புடன் தொடர்புடையவர்கள் என்று கூறப்பட்டது. அத்துடன், இந்தத் தாக்குதலுக்கான பொறுப்பை ஐ. எஸ். அமைப்பு ஏற்றுக் கொண்டது.

இதேவேளை, ஆட்சியை கைப்பற்றுவதற்காக நடத்தப்பட்ட சதித் திட்டமே இந்தத் தாக்குதல் என்றும் இது குறித்து முன்னரே ஆட்சியில் இருந்தவர்களையும் பாதுகாப்பு அதிகாரிகளையும் உளவுத் தகவல்கள் எச்சரித்த போதிலும் தாக்குதல்களை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்ற குற்றஞ்சாட்டுகள் இன்றும் உள்ளன.

இந்தத் தாக்குதல்கள் தொடர்பில் 60 பேர் வரை கைது செய்யப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## களவெடுக்க...

இடம்பெற்றுள்ளது.

இதில், தும்பளை - மாம்பிரம்பற்றை வீதியில் சகோதரியுடன் வசித்து வந்த செம்பியன்பற்று வடக்கை சேர்ந்த சின்னத்தம்பி குணதேவி (வயது - 69) என்பவரே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு,

குறித்த வீட்டில் இரு சகோதரிகள் வசித்து வந்துள்ளனர். உயிர்த்த ஞாயிறு தினமான நேற்று காலை ஒருவர் தேவாலயத்துக்கு சென்றுள்ளார். மற்றையவர் வீட்டிலிருந்துள்ளார்.

அந்தசமயத்தில், அயல் வீட்டில் வசிக்கும் இளைஞர் களவெடுக்கும் நோக்கில் வீட்டுக்குள் புகுந்துள்ளார். அவர் களவில் ஈடுபடுவதை மூதாட்டி கண்டுள்ளார். இதையடுத்து மூதாட்டியை இளைஞர் பொல்லால் தலையில் தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

தேவாலயத்துக்கு சென்று வந்தவர் தனது சகோதரி இரத்தம் தோய்ந்த நிலையில் இறந்து கிடப்பதை கண்டு அயலவர்களை உதவிக்கு அழைத்துள்ளார். இதைத் தொடர்ந்து, பருத்தித்துறை பொலிஸாருக்கு முறைப்பாடு அளிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் சடலத்தை உடல்கூராய்வுக்காக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒப்படைத்தனர்.

அத்துடன், சந்தேகநபரான இளைஞரையும் கைது செய்தனர். மேலும், கைதான நபர் தானே கொலையை செய்தார் என்று ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## ஈஸ்டர்...

அன்று அல்லது அதற்குள் பாராளுமன்றத்தில் இந்த அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த ஆணைக்குழு அறிக்கையை பாராளுமன்றத்தின் அதிகாரபூர்வ வலைத்தளம் வழியாக பொதுமக்கள் இன்னும் அணுகலாம். இந்த அறிக்கையின் உள்ளடக்கங்களை சட்டமா அதிபர் ஏற்கனவே வைத்திருக்கிறார் - மேலும் முழுமையாக அவருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது .

துரதிர்ஷ்டவசமாக, தற்போதைய அரசாங்கம் ஈஸ்டர் தாக்குதல்கள் என்ற தேசிய துயரத்தை ஓர் அரசியல் கருவியாகப் பயன்படுத்திக் கொள்கிறது. உணர்ச்சிபூர்வமான பதில்களைத் தூண்டவும் உள்ளூராட்சித் தேர்தல் செயல்முறையின் மத்தியில் பொதுமக்களின் உணர்வுகளை கையாளவும் அதைப் பயன்படுத்துகிறது. இத்தகைய நடத்தை மலிவான மற்றும் சூழ்ச்சிகரமான அரசியல் சந்தர்ப்பவாதம் அரசுக்கு ஏற்படுத்தும் ஒரு சரிவைக் குறிக்கிறது.

ஒரு சட்டபூர்வமான குற்றவியல் விசாரணை புறநிலை மற்றும் பாரபட்சமற்ற தன்மையுடன் நடத்தப்பட வேண்டும். முதலில் ஓர் இலக்கை அடையாளம் கண்டு, பின்னர் ஒரு முன் கூட்டிய குற்றச்சாட்டை ஆதரிப்பதற்கான ஆதாரங்களைத் தேடுவது ஒரு விசாரணை அல்ல. இது தனிநபர்களை, குறிப்பாக மாறுபட்ட அரசியல் கருத்துகளைக் கொண்டவர்களைத் துன்புறுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு திட்டமிடல் ஆகும்.

இந்த அரசாங்கம், இந்த துக்ககரமான தேசிய துயரத்தை அரசியல் ஆதாயத்துக்கான ஒரு கருவியாகப் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன். இத்தகைய நடவடிக்கைகள் நேர்மையற்றவை மட்டுமல்ல, பாதிக்கப்பட்டவர்களின் நினைவை மிகவும் அவமதிப்பவை. இது, எல்லா வகையிலும், பொருத்தமற்றது - இழிவானது - வெட்கக்கேடானது - என்றும் சொன்னார். (ஐ)

# மணல் கடத்திய டிப்பர்மீது பொலிஸார் துப்பாக்கிசூடு!

மன்னார், ஏப். 21

கட்டளையை மீறிச் சென்ற டிப்பர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி பிடித்த அடம்பன் பொலிஸார், அதிலிருந்த இருவரை கைது செய்தனர்.

மன்னார் - அடம்பன் - பள்ளமடு பகுதியில் நேற்றைய தினம் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் மீதே இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

பொலிஸார் டிப்பரை வழிமறித்த நிலையில் அது நிற்கவில்லை. இதையடுத்து ஆகாயத்தை நோக்கி சுட்டு எச்சரிக்கை பிறப்பிக்கப்பட்டது. அதையும் மீறி டிப்பர் சென்ற நிலையில் அதனை துரத்திச் சென்ற பொலிஸார் ரயர்மீது துப்பாக்கிச்சூடு டிப்பரை பிடித்தனர்.

இதைத் தொடர்ந்து டிப்பர் சாரதியும் அவரின் உதவியாளரும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை அடம்பன் பொலிஸ் பிரிவில் அரச மற்றும் தனியார் காணிகளில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றன என்று மக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றமை தெரிந்ததே. (ஐ)

# புனித தந்ததாது ஒளிப்படம் சி.ஐ.டியினர் விசாரணையில்

கொழும்பு, ஏப். 21

சிறீ தலதா வழிபாட்டின் போது புனித தந்ததாதுவை ஒளிப்படம் எடுத்து சமூக ஊடகங்களில் வெளியிட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களம் விசாரணையை ஆரம்பித்துள்ளது.

வரலாற்று சிறப்புமிக்க கண்டி தலதா மாளிகையின் "சிறீ தலதா வழிபாடு" கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமானது. எதிர்வரும் 27ஆம் திகதி வரை இந்த கண் காட்சி நடைபெறவுள்ளது.

இந்நிலையில், சிறீ தலதா வழிபாட்டுக்கு சென்ற யாத்திரிகர் ஒருவர் அங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ள புனித தந்ததாதுவை ஒளிப்படம் எடுத்து சமூக ஊடகங்களில் வெளியிட்டமை தெரிய வந்தது.

மத அனுஷ்டானத்தில் கலந்து கொள்ளும் யாத்திரிகர்கள் கைபேசி பயன்படுத்துல், நினைவுச்சின்னத்தை ஒளிப்படம் எடுத்தல் என்பன தடை செய்யப்பட்டுள்ளன. இந்த நிலையில், சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட ஒளிப்படம் சிறீ தலதா வழிபாடு நிகழ்வில் எடுக்கப்பட்டதா? யாத்திரிகர் ஒருவரால் படம் பிடிக்கப்பட்டதா? அல்லது டிஜிற்றல் முறையில் மாற்றப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிய குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

## ஊழல்...

உறுதிப்படுத்தப்பட்டு வருகிறது என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் வவுனியா மாவட்டத்துக்கு வருகை தந்த பிரதமர் ஹரிணி அமரசூரிய, நெடுங்கேணியில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், எமது நாட்டில் முன்னர் இருந்த அரசியல் வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மலையகத்துக்கென வெவ்வேறாக இருந்தது. அவர்கள் பிரதேசங்களுக்கு, இனங்களுக்கு என வெவ்வேறாகவே தமது அரசியல் கலாசாரத்தை முன்னெடுத்து வந்தனர்.

இதனூடாகவே ஊழல் நிறைந்த அரசியல் உருவானது. ஒரு கதை உள்ளதுதானே, அரசியல் ரீதியாக நிர்க்கத்தியானவர்களின் தஞ்சம் இனவாதம் என்று. எனினும் நீங்கள் இன, மத பேதங்களை பின்தள்ளி எமது அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வந்தது குறித்த கலாசாரத்தை மாற்றுவதற்கே என்று எமக்கு தெரியும். இந்த நாட்டு மக்கள் முதல் தடவையாக கொள்கை மற்றும் நோக்கத்தை பார்த்து வாக்களித்துள்ளனர்.

நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு பொதுக் கூட்டங்களில் நான் பங்கேற்றிருந்தேன். அத்துடன், அங்கிருந்த சில வீடுகளுக்கும் சென்றிருந்தேன். குறித்த வீடுகளில் குறைந்தது ஒருவராவது வெளிநாட்டுக்கு சென்று குடும்பத்தை விட்டு பிரிந்துள்ளனர்.

தமது நாட்டில் - தமக்குரிய ஊரில் இருந்துகொண்டு பொருளாதார ரீதியாக முன்னேறுவதற்கு வழி இல்லாமையே இதற்கு காரணமாகும். இவ்வளவு காலமும் கிராமங்கள் அபிவிருத்தியடையாமல் இருந்தமைக்கு காரணம் பிரதேச சபைகளுக்கு போதுமான நிதி கிடைக்காமை அல்ல. மாறாக, ஆட்சியாளர்கள் மக்களின் பிரச்னைகள் தொடர்பில் உணர்வுபூர்வமாக செயல்படாமையே இதற்கு காரணமாகும். தமது கிராமத்துக்குரிய அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கே பிரதேச சபைகள் உள்ளன.

கிராமிய வீதிகள், வடிகால் கட்டமைப்பு, முன்பள்ளிகள், பஸ் தரிப்பிடங்கள் போன்றவற்றை முன்னெடுத்து செல்வதற்கே பிரதேச சபைகள் உள்ளன. இவை மக்களின் அன்றாட வாழ்வியலுக்கு தேவையானவை. நாம் தேவைக்கு அதிகமாக துன்பங்களை அனுபவித்துள்ளோம். இவை அனைத்தும் இந்தத் தலைமுறையுடன் முடிவுக்கு வர வேண்டும். அடுத்த பரம்பரையினருக்கு அழகிய வளமான நாட்டை சொந்தமாக்கிக் கொடுப்பதே எமது இலக்காகும் - என்றார். (ஐ)

## ஜனாதிபதி...

அமைக்கப்பட்டுள்ள விசேட குழுவிடம் இந்த அறிக்கை வழங்கப் பட்டுள்ளது. இதனை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜய பால தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் பணிப்புரைக்கமைய ஜனாதிபதி செயலாளர் நந்தித சனத் குமாநாயக்கவால் இந்த அறிக்கை கையளிக்கப்பட்டது.

கடந்த 2019 ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தில் தேவாலயங்கள் மற்றும் சில இடங்களில் தற்கொலை மற்றும் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இந்தத் தாக்குதல்களில் 260இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பில் விசாரித்து பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக 2019 செப்ரெம்பர் 22ஆம் திகதி அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆணைக்குழுவை அமைத்தார். இந்த ஆணைக்குழுவின் தலைவராக உயர் நீதிமன்ற நீதியரசர் ஜனக் டி சில்வா நியமிக்கப்பட்டார். 6 பேர் கொண்ட இந்த ஆணைக்குழு, இறுதி அறிக்கையை 2021 பெப்ரவரி முதலாம் திகதி அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் சமர்ப்பித்தது.

இதேநேரம், இன்னமும் பகிரங்கப்படுத்தப்படாத இந்த அறிக்கை சரியான நேரத்தில் பொதுமக்களுக்கு வெளியிடப்படும் என்று அமைச்சர் ஆனந்த விஜயபால கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# உயிர்த்த ஞாயிறு வழிபாடு மன்னாரில் சிறப்புற நடந்தது



மன்னார், ஏப். 21

உயிர்த்த ஞாயிறு தினம் நேற்று மன்னார் மாவட்டத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இயேசுவின் உயிர்ப்பு பெருவிழா நள்ளிரவுத் திருப்பலி மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் நேற்று முன்தினம் இரவு 11.15 மணிக்கு நடைபெற்றது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் குருக்கள் இணைந்து திருவிழா திருப்பலி கூட்டாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

இதேசமயம், மன்னார் மறை மாவட்டத்தில் உள்ள பல்வேறு தேவாலயங்களிலும் நள்ளிரவு திருப்பலி நடைபெற்றன.

இதையொட்டி, மன்னார் மாவட்டத்திலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 122 கிலோ கஞ்சா, பணத்துடன் சந்தேகநபர்கள் இருவர் கைது!

கொழும்பு, ஏப். 21


122 கிலோ கேரள கஞ்சா மற்றும் 9 இலட்சம் ரூபாய் பணத்துடன் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு - கட்டுவாப்பிட்டி பகுதியில் இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைதானவர்கள் 25, 48 வயதுடையவர்களாவர்.

கைதானவர்களிடமிருந்து 122 கிலோ கிராம் 920 கிராம் கேரள கஞ்சா, கஞ்சா கஞ்சா விற்பனை மூலம் பெறப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 9 இலட்சத்து 61 ஆயிரம் ரூபாய் பணம் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# தமிழ் அரசுக் கட்சியின் தேர்தல் பணிமனை திறப்பு



வவுனியா, ஏப். 21

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பிரதேச தேர்தல் பணிமனை வவுனியா மாகறம்பைக்குளம் பிரதான வீதியில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.


எதிர்வரும் மே 6ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் பிரசார பணிகளுக்காகவே இந்த பணிமனை திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கு போட்டியிடுவோரின் பிரசார பணிகளுக்கான இந்தப் பணிமனையை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ப. சத்தியலிங்கம் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ-10)

# நெல் விலை தொடர்பாக இனி பிரச்னைகள் எழாது

## ஜனாதிபதி அநுர குமார



கொழும்பு, ஏப். 21

**மீண்டும் ஒருபோதும் நெல் விலை தொடர்பில் பிரச்னை ஏற்படாது என ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.**

பொலநறுவையில் நேற்று நடந்த மக்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும், நெல் களஞ்சியசாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. நெல் கொள்வனவுக்காக 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நாங்கள் தயாராகிவிட்டோம். 3 இலட்சம் மெற்றிக் தொன் கொள்ளளவு கொண்ட களஞ்சியசாலைகளை புதுப்பித்துள்ளோம். நெல் கொள்வனவுக்கான வேலைத் திட்டங்களை மேற்கொண்டுள்ளோம். பாழடைந்து கிடந்த களஞ்சிய சாலைகளை மறுசீரமைக்க நிதி ஒதுக்கினோம். முதலாவது நடவடிக்கையாக நெல் கொள்வனவுக்காக நெல் கொள்வனவு சபைக்கு 500 கோடி நிதி வழங்கினோம்.

சதொச மேலும் நெல் கொள்வனவுக்காக திட்டமொன்றை வகுத்தது. இதை விடக் குறைவாகக் கொடுத்தாலும் பரவாயில்லை - இதை விட அதிகமாகக் கொடுத்தாலும் பரவாயில்லை. ஆனால், அதிகளவில் நெல்லை வழங்க முடியாது என நாங்கள் சொன்னோம். அதற்கும் நாங்கள் கட்டுப்பாட்டு விலையை வழங்கியுள்ளோம். குறைந்த விலையிலான அனைத்து நெல்லையும் அரசாங்கம் விலைக்கு வாங்கும். விவசாயிகள் இனி தங்கள் நெல்லை விற்க முடியாது என்று முறைப்பாடு செய்யத் தேவையில்லை. விலைகளை நிலைப்படுத்த அரசாங்கம் தலையிடத் தயாராக உள்ளது.

நெல் விலை குறைந்தால் அதை வாங்குவோம். அதிகரித்தால் அவர்கள் வாங்குவார்கள். அரசாங்கத்துக்கு அவற்றை வாங்கி சேமித்து வைக்க வேண்டிய தேவையில்லை. விவசாயிகளுக்கான நியாயமான விலையை வழங்குவதே எங்களின் நோக்கம். அந்தத் திட்டம் வெற்றியளித்துள்ளது. இனி விவசாய உற்பத்திகளை அற்ப விலைக்கு விற்க நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் - என்றார். (ஐ)

# கட்டைக்காட்டில் பொது மண்டபத்தில் தேசிய மக்கள் சக்தியின் சுவரொட்டி!

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ். வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் முள்ளியான் உப அஞ்சல் அலுவலகம் அமைந்துள்ள கட்டடத்தில் தேசிய மக்கள் சக்தியின் சுவரொட்டிகளை ஒட்டியதால் மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற தேர்தல்களின் போதும் கட்டைக்காடு கிராமத்தின் பொது மண் டபங்களில் தேர்தல் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு தேர்தல் விதிமுறைகள் மீறப்பட்டன.

இந்த நிலையில் தேர்தல் பிரசாரத்துக்காக ஜனாதிபதியின் யாழ். வருகையை முன்னிட்டு முள்ளியான் உப அஞ்சல் அலுவலகம் அமைந்துள்ள கிராம பொது மண்டபங்களில் ஜனாதிபதியின் படத்துடன் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித் தனர்.

தேர்தல் விதிமுறைகளை மீறி பொது இடங்களில் சுவரொட்டிகளை ஒட்டுபவர்களை கைது செய்யுமாறு பொலிஸாரை அப்பகுதி சமூக ஆர்வலர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (எ- 05)

# மருத்துவருக்கு கொலை மிரட்டல் நடவடிக்கை எடுக்காத பொலிஸார்!

## பொலிஸ் மா அதிபரின் கவனத்துக்கு கொண்டுசென்றது மருத்துவர் சங்கம்

யாழ்ப்பாணம், ஏப். 21

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் மருத்துவர் ஒருவருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை குறித்து தெல்லிப்பழை பொலிஸார் நடவடிக்கை எடுக்காதமை தொடர்பில் பதில் பொலிஸ் மா அதிபரின் கவனத்துக்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கொண்டு சென்றுள்ளது.

கடந்த 2ஆம் திகதி தெல்லிப்பழை மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்ற ஒருவரை சாதாரண விடுதிக்கு மாற்ற முற்பட்டபோது, அந்த நோயாளியின் நெருங்கிய உறவினர் ஒருவர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். அத்துடன், நோயாளிக்கு மருத்துவமனையில் வழக்கமாக அளிக்கப்படாத வசதிகளையும் வழங்கவேண்டும் என்று வற்புறுத்தினார். அத்துடன், மருத்துவரின் கருத்துகளை மீறி தனக்கு தெரிந்தவர்களையும் அவசர சிகிச்சைப் பிரிவுக்குள் அழைத்துச் சென்றார். இதையடுத்து, அவசர சிகிச்சைப் பிரிவில் இருந்தவர்களை மருத்துவர் வெளியே செல்லுமாறு கூறினார். இதையடுத்து, மருத்துவரை மிரட்டும் பாணியில் அவர்கள் நடந்து கொண்டனர். அத்துடன், கொலை அச்சுறுத்தலும் விடுத்திருந்தனர்.

இது தொடர்பில் அன்றைய தினமே தெல்லிப்பழை பொலிஸாருக்கு மருத்துவமனை நிர்வாகம் முறைப்பாடு செய்திருந்தது. ஆனால், இரண்டு வாரங்கள் கடந்தும் பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையிலேயே அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இந்த விடயத்தை பதில் பொலிஸ் மா அதிபரின் கவனத்துக்குக் கொண்டு சென்றது.

இது தொடர்பில் அந்த அமைப்பு பதில் பொலிஸ் மா அதிபருக்கு எழுதிய கடிதத்தில்,

கடந்த 2ஆம் திகதி மருத்துவமனைக்குள் வைத்து விடுக்கப்பட்ட மருத்துவர் ஒருவருக்கு விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல் தொடர்பில் மருத்துவமனை நிர்வாகம் தெல்லிப்பழை பொலிஸாருக்கு முறைப்பாடு அளிக்கப்பட்டு, இரு வாரங்கள் கடந்த நிலையிலும் சந்தேகநபர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த பாதுகாப்பற்ற சூழல் குறித்து மருத்துவர்கள் மாத்திரமின்றி மருத்துவமனையின் அனைத்து சுகாதார பணியாளர்களும் ஏமாற்றத்துக்கும் மன உளைச்சலுக்கும் உள்ளாகியுள்ளனர் - என்று சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

# பெண் வேடமணிந்து திருடிய நால்வர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 21

இணுவில் மஞ்சத்தடி முருகன் தேர்த் திருவிழாவில் பெண் வேடமணிந்து பக்தர்களின் நகைகளை திருடிய நால்வரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இணுவில் மஞ்சத்தடி முருகன் ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா நேற்று நடைபெற்றது. இதன்போது கூட்ட நெரிசலைப் பயன்படுத்தி தங்க நகைகள் களவாடப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் உடனடியாக விசாரணை நடத்தி 4 சந்தேக நபர்களை கைது செய்தனர்.

இவ்வாறு கைதானவர்கள் ஆண்கள் என்றும் மட்டக்களப்பை சேர்ந்த அவர்கள் பெண்களின் வேடமணிந்து திருட்டில் ஈடுபட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நால்வரையும் பொலிஸார் விசாரித்து வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.04.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.